# தமிழரசு

1-2-1997 ரூ. 3







23 வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி 1997



# இந்த இதழில் ...


2 "அடிப்படை வசதிகளை மேம்படுத்திட புதிய மாநில நிதி நிறுவனம் ஏற்படுத்தப்படும்"
- மேதகு ஆளுநர் திரு. கிருஷ்ண் காந்த்

17 முதுகுவலி - மருத்துவக் கட்டுரை

21 எங்கள் ஊர் பிரச்சினை

24 எழுத்தாளர் அசோகமித்திரனுடன் நேர்காணல்

26 மௌனம் - சிறுகதை

32 நாயக்கர் காலத்து நாணயங்கள்

33 விளையாட்டு விடுதிகள்
- மாணவர் பக்கம்

36 தமிழுக்கு முதல் மரியாதை

38 சென்னையில் தென்னை -
விவசாயக் கட்டுரை - சிவசூரியன், இ.ஆ.ப.

41 அறிவியல் துளிகள்

44 அரசு உதவி பெற யாரை அணுக வேண்டும்? - மறுவாழ்வுத்துறை

48 ஆசிரியர் மடல்



**தமிழரசு**

திருவள்ளுவராண்டு: 2028
தைத் திங்கள் : 19
இதழ்: 15
மலர்: 27
1.2.1997
விலை: ரூ. 3



# "அடிப்படை வசதிகளை மேம்படுத்திட புதிய மாநில நிதி நிறுவனம் ஏற்படுத்தப்படும்"

## – மேதகு ஆளுநர் திரு. கிருஷண்காந்த் அறிவிப்பு

**மதிப்பிற்குரிய சட்டப் பேரவை உறுப்பினர்களே!**

நாடு விடுதலை பெற்ற பொன்விழா ஆண்டில் நடைபெறும் இந்தப் பதினோராவது சட்டப் பேரவையின் இரண்டாவது கூட்டத் தொடரில் கலந்து கொள்ளும் உங்கள் அனைவரையும் அன்போடு வரவேற்கிறேன். பரவலாக்கப்பட்ட ஜனநாயக அமைப்பின் மூலமும், உள்ளாட்சி அமைப்புகளின் எல்லா நிலைகளுக்கும் ஒரே நேரத்தில் தேர்தல் நடத்தியதன் மூலமும், நம் மாநிலத்தின் அதிகாரக் கட்டமைப்பில் கடந்த எட்டு மாத காலத்தில் மிக முக்கியமான மாறுதல்கள் கொண்டு வரப்பட்டுள்ளன.

2. சென்ற ஆண்டு இந்த மாமன்றத்தில் உங்களிடையே உரையாற்றிய டாக்டர் எம். சென்னாரெட்டி அவர்கள் இன்று நம்மிடையே இல்லை என்பதை மிகுந்த துயரத்துடன் நாம் நினைவு கூர்கிறோம். டாக்டர் எம். சென்னாரெட்டி அவர்கள் இருமுறை ஆந்திர மாநில முதலமைச்சராகவும், மத்தியில் திருமதி இந்திராகாந்தி அமைச்சரவையில் அமைச்சராகவும், பஞ்சாப், உத்திரப்பிரதேசம், ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களின் ஆளுநராக இருந்தபின் தமிழகத்து ஆளுநராகவும் இருந்து, மிகச் சிறந்த பொதுத் தொண்டாற்றிய தலைவர் ஆவார். பொதுவாழ்வில் எளிமைக்கு எடுத்துக்காட்டாகவும், பொறுமையின் உறைவிடமாகவும் அனுபவச் சுரங்கமாகவும், ஆற்றலின் இருப்பிடமாகவும் விளங்கிய அவரது மறைவு தமிழகத்துக்கும் ஆந்திரத்துக்கும் மட்டுமின்றி இந்திய நாட்டுக்கே ஒரு பேரிழப்பாகும். நமது நாட்டின் கீர்த்திமிக்க புதல்வரான அவருக்கு நெஞ்சம் நிறைந்த புகழஞ்சலி செலுத்துவதோடு, அவர்தம் குடும்பத்தினருக்கு நம் ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

3. 1996ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் முற்பகுதியில் பெய்த பெரும்மழையினாலும், பெருகிய வெள்ளத்தினாலும், தமிழகத்தின் வடக்குக் கடலோர மாவட்டங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டன. இதனால் 151 பேர் உயிரிழந்தனர்; 3,738 கால்நடைகள் உயிரிழந்தன; 58 ஆயிரத்து 313 குடிசைகள் முழுவதுமாகவும், 6 இலட்சத்து 29 ஆயிரத்து 987 குடிசைகள் பகுதியாகவும் பழுதடைந்தன; 3 இலட்சத்து 8 ஆயிரத்து 112 எக்டேர் நிலங்களில் முழுமையாகவும், 2 இலட்சத்து 20 ஆயிரத்து 903 எக்டேர் நிலங்களில் பகுதியாகவும் பயிர்ச்சேதம் ஏற்பட்டது. இதுதவிர, தோட்டக்கலைப் பயிர்கள் 15 ஆயிரத்து 437 எக்டேர் நிலங்களில் முழுமையாகவும், 6 ஆயிரத்து 626 எக்டேர் நிலங்களில் பகுதியாகவும் பாதிக்கப்பட்டுள்ளன. இந்த மாவட்டங்களிலெல்லாம், பெரும்பாலான சாலைகள் மிக மோசமாகப் பழுதுபட்டதோடு, ஏராளமான பாசனக் கண்மாய்களிலும், கால்வாய்களிலும் உடைப்பேற்பட்டன. முதலமைச்சரின் நேரடி மேற்பார்வையில், அரசு இயந்திரம் முடுக்கிவிடப்பட்டு, வெள்ளத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடி நிவாரண உதவிகள் மிக விரைவாக வழங்கப்பட்டன. மிகப் பெரும்பாலான உடனடி நிவாரண நடவடிக்கைகள் வெள்ளப் பாதிப்பு ஏற்பட்ட 12 நாட்களுக்குள்ளாகவே முடிக்கப்பட்டன.

4. இந்த வெள்ளச் சீற்றத்தினால் பயிர்களுக்கும் உடமைகளுக்கும் ஏற்பட்ட பாதிப்பு ரூபாய் ஆயிரம் கோடிக்கும் மேல் என மதிப்பிடப்பட்டுள்ளது. உடனடி வெள்ள நிவாரண நடவடிக்கைகளுக்காக இந்த அரசு ஏற்கெனவே ரூ.195 கோடி அனுமதித்துள்ளது. மேலும் ரூ.150 கோடி மதிப்பில் சாலை பழுது பார்க்கும் பணிகள் மேற்கொள்ளப்படவும் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள விவசாயிகள் செலுத்த வேண்டிய

30.6.1997 முடிய உள்ள நடப்புக் குத்தகைத் தொகை மற்றும் குத்தகை பாக்கித் தொகையைச் செலுத்துவதை இரண்டு ஆண்டுகளுக்கு ஒத்திப் போடவும் குத்தகை பாக்கிக்காக குத்தகை விவசாயிகள் நிலத்திலிருந்து வெளியேற்றப்படாமல் பாதுகாக்கவும் அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. மேலும், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் செலுத்தவேண்டிய குறுகிய கால கூட்டுறவுக் கடன்களை மத்தியகாலக் கடன்களாக மாற்றவும் மத்திய கால கடன்களை நீண்டகால கடன்களாக மாற்றவும் அரசு முடிவு செய்துள்ளது. இவ்வளவு பெரிய அளவிலான வெள்ளச் சேதத்தை ஈடு கட்டுவதற்கு மத்திய அரசிடமிருந்து நிதி உதவி கோரப்பட்டுள்ளது. வெள்ளப் பாதிப்புக்குப்பின் உடனடியாக மைய வேளாண்மை அமைச்சர் தமிழகத்துக்கு வருகை தந்து பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டார். பின்பு மைய அரசு அலுவலர்கள் அடங்கிய குழுவினை அனுப்பி வெள்ளச் சேதப் பகுதிகளைப் பார்வையிட்டு, பாதிப்பு மற்றும் இழப்பின் அளவை மதிப்பிட ஏற்பாடு செய்தார். இதையடுத்து, மைய அரசிடமிருந்து கணிசமான நிதி உதவி எதிர்பார்க்கப்படுகிறது. இந்த வெள்ள நிவாரணப் பணிகளில் கட்சி சார்பற்ற முறையில் பொது மக்கள் ஆற்றியுள்ள தொண்டும், முதலமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க இதுவரை வெள்ள நிவாரண நிதி 14.42 கோடி ரூபாய் அளவிற்கு வழங்கியுள்ள செயலும் பாராட்டத்தக்கதாகும்.

5. நீண்டகாலமாகத் தள்ளிப் போடப்பட்டுவந்த உள்ளாட்சி அமைப்புகளின் எல்லா நிலைகளுக்குமான தேர்தலை மாநிலத்தில் அடித்தளத்து ஜனநாயக அமைப்புகளுக்குப் புத்துயிரூட்டி, உத்வேகம் அளிக்க வேண்டும் என்ற வாக்குறுதிக்கிணங்க, இந்த அரசு ஒரே நேரத்தில் வெற்றிகரமாக நடத்தி முடித்துள்ளது. இந்தத் தேர்தல்கள் சுமுகமாகவும், சுதந்திரமாகவும், பாரபட்சமின்றியும் நடத்தி முடிக்கப்பட்டிருப்பது பெரிதும் மன நிறைவளிக்கக்கூடிய ஒன்றாகும். இந்த உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் பொறுப்பேற்றவுடன், அவர்கள் அனைவரையும் கொண்ட ஒரு கருத்தரங்கை நடத்த அரசு நடவடிக்கை மேற்கொண்டது. இக்கருத்தரங்கில், திறன் வாய்ந்த, மக்களின் எதிர்பார்ப்புகளுக்கேற்பப் பணியாற்றும் தன்மை கொண்ட உள்ளாட்சி நிர்வாகத்தை அளிப்பது பற்றியும், அதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுப்பது பற்றியும் அந்தத் தலைவர்களின் கருத்தறியப்பட்டது.





6. உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கூடுதல் அதிகாரங்களையும் பொறுப்புகளையும் அளிப்பதற்கும், அந்தப் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான உரிய நிதி ஆதாரங்களை அளிப்பதற்கும் அரசு உறுதி பூண்டுள்ளது. உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கூடுதல் பொறுப்புகளை ஒப்படைப்பது தொடர்பான சட்ட, நிர்வாக, நிதி அடிப்படையிலான கூறுகளை ஆராயும்படி மாநில திட்டக் குழு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. இதன் பரிந்துரைகள் அண்மையில் பெறப்பட்டுள்ளன. இந்தப் பரிந்துரைகள் மீது அரசு விரைவில் உரிய முடிவெடுத்து, அவற்றை வரும் நிதிநிலை அறிக்கைக் கூட்டத் தொடரின்போது அறிவிக்கும்.

7. அரசியல் சட்டப்படி, 1994ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட மாநில நிதிக்குழு, உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாநில அரசிடமிருந்து நிதிப்பகிர்வு அளித்தல், அவை தங்கள் சொந்த வருவாயை அதிகரித்துக் கொள்ளுதல், அவை மக்களுக்கு ஆற்றும் பணிகளின் தரத்தை மேம்படுத்துதல் ஆகியவை தொடர்பான கூறுகள் பற்றிய தன் அறிக்கையை அரசுக்கு அண்மையில் அளித்துள்ளது. இந்தப் பரிந்துரைகள் அரசால் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன. இவற்றின் மீதான அரசின் முடிவுகள் விரைவில் எடுக்கப்படும். அடுத்த திங்களில் சட்டப் பேரவையின் முன் வைக்கப்பட இருக்கும் நிதிநிலை அறிக்கையில் உரிய நிதிஒதுக்கிடுகள் சேர்க்கப்படும். கூடுதல் பொறுப்புகள் அளித்தல், கூடுதல் நிதி ஆதாரத்தை அளித்தல் ஆகியவை தொடர்பான அரசின் முடிவுகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான சட்டமுன் வடிவுகள் இந்தக் கூட்டத் தொடரில் கொண்டு வரப்படும். அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கும், இப்போது நடைமுறையில் இருக்கும் சட்டங்களுக்குப் பதிலாக, பொதுவான ஒரு தனிச் சட்டம் கொண்டு வருவதும் இந்த அரசின் திட்டமாகும்.

8. சென்ற ஐந்தாண்டுகாலமாக தள்ளிப் போடப்பட்டுவந்த தொடக்கக் கூட்டுறவு சங்கங்களுக்கான தேர்தலை இந்த அரசு நடத்தி முடித்து தன் வாக்குறுதியை நிறைவேற்றியுள்ளது. பதினான்காயிரத்துக்கும் மேற்பட்ட தொடக்கக் கூட்டுறவு சங்கங்களுக்கு தேர்தல்கள் நடந்து முடிந்துள்ளன. பால்வளக் கூட்டுறவுச்

சங்கங்களுக்கும், வரும் மார்ச் திங்கள் 31ஆம் நாளுக்குள் தேர்தல் நடத்தப்படும். எஞ்சியுள்ள தொடக்கக் கூட்டுறவு சங்கங்களுக்கு தேர்தல் நீதி மன்றங்களால் தடை செய்யப்பட்டுள்ளது. இக்கூட்டுறவுச் சங்கங்களுக்கு நீதிமன்ற ஆணைக்கு ஏற்ப தேர்தல் நடத்தப்படும்.

9. நிர்வாக இயந்திரத்தின் திறனை வளர்ப்பதற்கும், களப்பணியினைப் பயனுள்ள வகையில் கண்காணிக்கவும், நிர்வாகத்தை மக்கள் எளிதில் அணுகக்கூடிய வகையில் அமைக்கவும், இந்த அரசு சிறிய மாவட்ட அலகுகளை உருவாக்க முடிவு செய்துள்ளது. அந்த அடிப்படையில் திருவாரூரைத் தலைமையிடமாகக் கொண்டு திருவாரூர் ஏ.டி. பன்னீர் செல்வம் மாவட்டம், தேனியைத் தலைமையிடமாகக் கொண்டு வைகை வீரன் அழகுமுத்து மாவட்டம், நாமக்கல்லைத் தலைமையிடமாகக் கொண்டு இராஜாஜி மாவட்டம், திருவள்ளூரைத் தலைமையிடமாகக் கொண்டு எம்.ஜி.ஆர். மாவட்டம் என்று நான்கு புதிய மாவட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்த நான்கு மாவட்டங்களும் 1.1.1997 முதல் இயங்கத் துவங்கியுள்ளன. இஃதன்னியில், காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்ட மாவட்டத்திற்கு அறிஞர் அண்ணாவின் பெயரும், திண்டுக்கல்லைத் தலைநகராகக் கொண்ட மாவட்டத்திற்கு மன்னர் திருமலை பெயரும் சூட்டப்பட்டது பொருத்தமுடையதாகும்.

10. தமிழக மக்கள், ஊழலற்ற, வெளிப்படையான நிர்வாகத்தைத் தரவேண்டுமென்று இந்த அரசுக்கு மிகப் பெரிய பொறுப்பை வழங்கியுள்ளனர். வரலாறு படைத்துள்ள இந்தப் பொறுப்பை இந்த அரசு உணர்ந்து, ஏற்கெனவே அறிவித்தபடி, அரசு நிர்வாகத்தில் நடைமுறைகளை எளிதாக்கவும் ஊழலைத் தடுப்பதற்காகவும் தேவையான நடவடிக்கைகளைப் பரிந்துரைப்பதற்காக நீதிபதி திரு இராமானுஜம் தலைமையில் ஓர் உயர்மட்டக் குழுவை நியமித்துள்ளது. இக்குழுவின் பரிந்துரைகள் கிடைக்கப் பெற்றவுடன், அவற்றை ஆய்வு செய்து அதற்கேற்ப நிர்வாக சீர்திருத்தங்களைக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், ஒப்பந்தம் மற்றும் கொள்முதல் நடைமுறைகளில் வெளிப்படையான – நேர்மையான முறையைக் கொண்டுவர, சட்டரீதியான, நிர்வாக ரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் அரசு சிந்தித்து வருகின்றது. அரசு விவகாரங்களில் ஊழலை ஒழிக்க பல்வேறு நடவடிக்கைகளைப் பரிசீலித்துவரும் அதே வேளையில், ஊழல் புகார்கள் மீது முழு முயற்சியோடு விசாரணை செய்து, நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்க இந்த அரசு தீவிர நடவடிக்கை எடுத்துள்ளது.

11. மாநிலத்தில் பொருளாதார வளர்ச்சியை அடைவதற்கு இன்றியமையாத தேவைகள் பொது அமைதியும், சமாதானமான சூழ்நிலையும்தான் என்பதை உணர்ந்த இந்த அரசு, தமிழகத்தில் சட்டம்

ஒழுங்கு பராமரிப்புக்குத் தலையாய முன்னுரிமை அளிக்கின்றது. இந்த அரசின் இடையறாத முயற்சியின் பலனாக, சமுதாய நல்லிணக்கம் பெரும்பாலான அளவில் மீண்டும் நிலை நாட்டப்பட்டுள்ளது. பொது மக்களின் எதிர்பார்ப்புகளுக்கும் கவலைகளுக்கும் பரிவோடு நடவடிக்கை எடுக்கக் கூடிய, தொழில் நுட்பத்திறன் கொண்டதொரு புதிய அமைப்பாக நம் காவல் துறை வடிவம் பெற்றுக் கொண்டு வருகிறது. மனித உரிமைகள் மீறப்படுவது தொடர்பாக பொதுமக்களிடமிருந்து வரும் புகார்களை விசாரிப்பதற்கு மாநில மனித உரிமைகள் ஆணையம் அமைப்பதற்கான அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

12. இப்போது நாம், ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தை தயாரிக்கும் பணியைத் துவக்கியுள்ளோம். இந்த அரசு, நிறைந்த அனுபவமும், புகழும் மிக்கவர்களை உறுப்பினர்களாகக் கொண்டு மாநிலத் திட்டக் குழுவைத் திருத்தி அமைத்துள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் எல்லா மட்டத்திலும் ஆங்காங்கே பொறுப்பேற்றுள்ள நிலையில், அவற்றின் ஆலோசனைகளையும், முன்னுரிமைகளையும் கருத்தில் கொண்டு, பரவலாக்கப்பட்ட முறையில் ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டம் தயாரிக்கும் பணி நடக்கும். மாநிலத்தில் எல்லா மக்களுக்கும் தேவையான குறைந்தபட்ச அடிப்படை வசதிகளை அளித்தல், வேலை வாய்ப்பு வசதிகளை உருவாக்குதல், வறுமையை ஒழித்தல், மாநிலத்தை விரைவாகத் தொழில்மயமாக்குதல் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல் ஆகியவற்றிற்கு ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தின்போது முன்னுரிமை அளிக்கப்படும்.

13. மாநிலத்தின் வேகமான வளர்ச்சிக்கும், வறுமைக் குறைப்புக்கும் பொருளாதார சீர்திருத்தங்களின் முக்கியத்துவத்தை உணர்ந்த இந்த அரசு, வரிச்சீரமைப்பில் தன் முயற்சிகளைத் தொடரும். சென்ற நிதி நிலை அறிக்கையில் வணிகவரி கட்டமைப்பில் மிக முக்கியமான சீர்திருத்தங்கள் அறிவிக்கப்பட்டன. அது இனியும் தொடரும் என்பதுடன், இந்த ஆண்டு முத்திரைக் கட்டணம், பத்திரப்பதிவு ஆகியவற்றில் சீர்திருத்தத்தைக் கொண்டுவரவும் அரசு உத்தேசித்துள்ளது. பொது மக்களுக்கான சேவையை மேம்படுத்துவதும், கட்டண விகிதங்களையும் வரி விதிப்புக் கட்டமைப்பையும் எளிமைப்படுத்துவதும் இந்த சீர்திருத்தத்தின் முக்கிய நோக்கங்களாக இருக்கும்.

14. நம் மாநிலப் பொருளாதாரத்தின் ஒரு முக்கியமான பகுதியாக பொதுத்துறை நிறுவனங்கள் விளங்குகின்றன. இதை உணர்ந்து, இந்த அரசு அவற்றின் செயலாக்கத்தை மேம்படுத்த உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளும். இதற்காக, ஒவ்வொரு நிறுவனத்துக்குமான தனி ஆய்வுகளை மேற்கொண்டு, நிர்வாகத்திறனை மேம்படுத்துதல், நிதி

மற்றும் நிறுவன அமைப்பை சீரமைத்தல் போன்ற உத்திகளை இந்த அரசு கையாளும். இதற்கான உரிய நடவடிக்கைகளைப் பரிந்துரைக்க, சிறந்த நிபுணர்களைக் கொண்ட ஒரு குழுவை நியமித்துள்ளது.

15. அடிப்படைக்கட்டமைப்பு வசதிகளான சாலைகள், மின்சாரம், குடிநீர் வசதி, சுகாதாரம், துறைமுகங்கள் போன்றவற்றில் பெருமளவில் முதலீடு செய்வதன் முக்கியத்துவத்தை இந்த அரசு உணர்ந்துள்ளது. எனவே தனியார் துறையானது பொதுத்துறையுடன் சேர்ந்து இந்த வசதிகளை உருவாக்கி, பராமரிக்க ஏற்றதொரு சூழ்நிலையை உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மாநிலத்தில் நடுத்தர மற்றும் சிறு துறைமுகங்களை மேம்படுத்தும் திட்டத்தில் தனியாரைப் பங்கு கொள்ளச் செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மாநில கடல்சார் வாரியம் (State Maritime Board) மேற்கொள்ளும்.



மின்சாரத் துறையிலும், பெரிய அளவிலான மின் உற்பத்தித் திட்டங்கள் தனியார் துறையில் நிறுவப்பட உள்ளன. இவை உற்பத்தி செய்யும் மின்சாரத்தை வாங்கி, தமிழ்நாடு மின்சார வாரியம் விநியோகிக்கும். இதுபோன்ற முயற்சியை மற்ற துறைகளிலும் மேற்கொள்ள அரசு திட்டமிட்டுள்ளது. நகராட்சிகளில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளில் முதலீடு செய்வதற்கு தேவையான நிதி ஆதாரத்தைத் திரட்ட, அனைத்திந்திய அளவிலான நிதி நிறுவனங்களுடன் இணைந்து தமிழ்நாடு நகர்புற அடிப்படை வசதி நிதிப் பணிகள் நிறுவனம் என்ற ஒரு புதிய மாநில நிதி நிறுவனம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

16. சமுதாயத்தில் நலிவடைந்த மக்களின் முன்னேற்றத்திற்கான வழி பெண்கள் முன்னேற்றமும் அவர்கள் சக்திமிக்கவர்களாக விளங்குவதுமே ஆகும். பெண்கள் முன்னேற்றத்திற்கான ஒரு மாபெரும் திட்டத்தை மாநிலத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்த அரசு முடிவு செய்துள்ளது. திறன் மிக்க, ஒற்றுமை நிறைந்த, தன்னிறைவுக் குழுக்களாக பெண்களை ஒருங்கிணைத்து அவர்களின் வருவாய் ஈட்டும் திறனை மேம்படுத்துவதும், அதன் விளைவாக அவர்களுடையவும் அவர்களின் குடும்பத்தினருடையவுமான வாழ்க்கை நிலையை உயர்த்துவதும் இந்தத் திட்டத்தின் நோக்கங்களாகும்.

17. கல்வி மேம்பாட்டுக்கு இந்த அரசு மிக

முக்கியமான இடத்தை அளிக்கின்றது. இந்த நூற்றாண்டின் இறுதிக்குள் அனைவர்க்கும் இலவசமாகத் தொடக்கக் கல்வி அளிப்பது என்ற இலக்கை அடைவதை ஒரு அறைகூவலாக ஏற்றுக் கொண்டு, பள்ளி வயது அடைந்த சிறார்கள் அனைவரையும் தொடக்கப் பள்ளிகளில் சேர்த்து, அவர்களைத் தொடர்ந்து கல்வி பயிலச் செய்வதற்கான திட்டம் ஒன்றை செயல்படுத்த இருக்கிறோம். மேலும், பள்ளிகளில் கட்டிடங்கள், கற்பிக்கும் உபகரணங்கள் போன்ற அடிப்படைத் தேவைகளை அதிகரிப்பதிலும், சிறார்களுக்கு அளிக்கப்படும் கல்வியின் தரத்தை மேம்படுத்துவதிலும் அதிக கவனம் செலுத்தப்படும். உலக வங்கி உதவியுடனான மாவட்டத் தொடக்கக் கல்வி திட்டம் இந்த ஆண்டு மேலும் மூன்று மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டு, மாநிலத்தில் ஏழு மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாநிலத்தில் பள்ளிக்கல்விக்கு அதிக கவனம் செலுத்தவேண்டும் என்ற நோக்கத்துடன், தலைமைச்செயலகத்தில் உள்ள கல்வித்துறை, பள்ளிக்கல்வித்துறை உயர்கல்வித்துறை என இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

18. சென்ற ஆண்டின் வறட்சியும் அதைத் தொடர்ந்து இந்த ஆண்டில் ஏற்பட்ட வெள்ளமும்

மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் கோவையில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக வெள்ளி விழா நிகழ்ச்சியில் பல்வேறு கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டி சேரன், ஜீவா மற்றும் மகாகவி பாரதியார் போக்குவரத்துக் கழகங்களின் 40 புதிய பேருந்துகளை தொடக்கி வைத்து வெள்ளி விழா பேருரையாற்றினார் (12.1.97)



மாநிலத்தின் மொத்த வேளாண் உற்பத்தியை, குறிப்பாக மொத்த உணவு தானிய உற்பத்தியை, மிகவும் பாதித்துள்ளன. தமிழகத்தில் வேளாண்மை முன்னேற்றத்தை, நிலைத்து நீடிக்கத்தக்கவாறு கொண்டுவரும் நோக்கத்துடன், நீர்ப்பாசன திட்டங்களில் பெருமளவில் முதலீடு செய்யப்பட்டு வருகின்றது. தமிழ்நாடு நீர் வளத் தொகுப்புத் திட்டத்தின்கீழ், ரூ.807 கோடி மதிப்பில் தமிழகத்திலுள்ள பல குறு மற்றும் பெரும்பாசனத்திட்ட மேம்பாட்டுப் பணிகள் செயலாக்கப்பட உள்ளன. பன்னாட்டு நிதி உதவி அமைப்புகளின் உதவியோடு மாநிலத்தில் உள்ள பாசன ஏரிகளையும் குளங்களையும் பழுதுபார்த்து நிலைநிறுத்தும் பணி படிப்படியாக எடுத்துக் கொள்ளப்படும். பாசன ஆதாரங்களுக்கு வரும் நீர்வரத்துக்கால்வாய்களைத் தூர்வாரி ஒழுங்குபடுத்தும் ஒரு விரைவுத் திட்டத்தை செயல்படுத்த அரசு உத்தேசித்துள்ளது.

19. வேளாண்மை அடிப்படையிலான தொழிற்சாலைகளை தமிழகத்தில் உருவாக்கும் நோக்கத்துடன், வணிகரீதியிலான மலர் உற்பத்தி, தோட்டக்கலை மற்றும் அறுவடைக்குப் பின்னான செய்முறைப் பணிகள் முதலியவற்றை ஊக்குவிப்பதற்காக, 'நபார்டு நிறுவனம்' அமைக்க உள்ள அதிநுட்ப வேளாண்மை நிதி நிறுவனத்தில், நிதி முதலீடு செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

20. அனைவருக்கும் அடிப்படை சுகாதாரம் அளித்தல், கிராமப்புறங்களில் மருத்துவ வசதிகளை மேம்படுத்துதல் ஆகியவற்றை உறுதி செய்யும் நோக்கத்துடன், வட்ட மருத்துவமனைகளுக்கும் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் தேவையான கருவிகளையும் பிற வசதிகளையும் பெருமளவில் அளித்துள்ளோம். ஏற்கெனவே அறிவித்தபடி, 300 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு ரூ.18கோடி செலவில் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. மேலும் 1997-98 ஆம் ஆண்டில் 300 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குக் கட்டடங்கள் கட்டப்படும். கிராமப்புற மக்களுக்கு நாள் முழுவதும் மருத்துவ வசதி கிடைக்கும் வகையில், மாநிலம் முழுவதும் உள்ள ஊராட்சி ஒன்றிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருபத்திநான்கு மணி நேரமும் இயங்கும்படி ஆணையிடப்பட்டுள்ளது. தமிழகம் முழுவதும் ஒரு மாபெரும் போலியோ தடுப்புத் திட்டம் வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்டுள்ளது. "அனைவருக்கும் மருத்துவ வசதி" என்ற இலக்கை கி.பி.2000 ஆம் ஆண்டுக்குள் அடைந்துவிடவேண்டும் என்பதில் அரசு உறுதி பூண்டுள்ளது.

21. இந்த அரசு மேற்கொண்ட சீரிய தொடர் முயற்சியின் பலனாக கிருஷ்ணா நதி நீர், குடி தண்ணீர்த் தட்டுப்பாடு உள்ள சென்னை மாநகருக்கு இறுதியாக 1996 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் வந்து சேர்ந்துவிட்டது. வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த முயற்சியின் பலனாக, சென்னை மாநகரில் தினசரி

குடிநீர் விநியோகம் முன் எப்போதும் இருந்திராத வகையில் 440 மில்லியன் லிட்டர் அளவுக்கு உயர்த்தப்பட்டுள்ளது. அத்துடன் சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்கும் அனைத்து நீர்த்தேக்கங்களும் நிறைந்திருக்கின்ற நிலையில், தற்போது உள்ள குடிநீர் வழங்கும் அளவை, வரும் கோடைக்காலத்திலும் தொடர முடியும் என அரசு நம்புகிறது. நகராட்சிப் பகுதிகளில் ரூ.50 இலட்சம் மதிப்பு வரையிலான குடிநீர் வழங்கும் திட்டங்களை அந்தந்த நகராட்சிகளே நிறைவேற்றிக் கொள்ளும் வகையில் அரசு அனைத்து நகராட்சிகளுக்கும் அதிகாரத்தை வழங்க முடிவெடுத்துள்ளது. அடுத்த மூன்றாண்டுகளில் மாநிலத்திலுள்ள அனைத்துக் குடியிருப்புகளுக்கும் போதுமான பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி செய்து தரப்படும்.

22. இந்தியாவின் தொழில் வரைபடத்தில் தமிழ்நாட்டை உரிய சிறப்பிடத்தில் மீண்டும் நிலை நிறுத்த அரசு உறுதிபூண்டுள்ளது. பொறுப்பேற்றுக் கொண்ட சிறிது காலத்திற்குள்ளேயே, தமிழ்நாடு ஒரு தன் முயற்சி நிறைந்ததும், ஒளிவு மறைவற்றதும், தொழில் முனைவோரிடையே நேயப்பண்பு கொண்டதுமான மாநிலம் என்ற நற்பெயரை ஈட்டியுள்ளது. உலகப் புகழ்பெற்ற பெருந் தொழில் நிறுவனங்களான ஹுயுண்டாய் நிறுவனம் மோட்டார் வாகனத் தயாரிப்புத் துறையிலும், பில்கிங்டன் மற்றும் செயின்ட் கோபெயின் நிறுவனங்கள் கண்ணாடி வகைகள் தயாரிப்புத் துறையிலும் தமிழ்நாட்டில் பெரும் முதலீடு செய்வது இந்த நற்பெயருக்குச் சான்றாக விளங்குகின்றன. புதிய தொழில்கள் எளிதில் துவக்கப்படுவதற்கு ஏதுவாக, தொழில் வளாகங்கள் அமைப்பதற்கு அதிக அளவில் நிலங்களைக் கையகப்படுத்தும் பணி அயர்வின்றி நடைபெற்று வருகிறது. மோட்டார் வாகனத் தயாரிப்புத் துறையில் பல துணைத் தொழில்கள் உருவாவதற்கும், ஏராளமான தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைப்பதற்கும் பெரும் வாய்ப்பு இருப்பதால், மோட்டார் வாகனத் தயாரிப்புத் தொழிலை முன்னணித் தொழிலாகக் கருத இந்த அரசு முடிவு செய்துள்ளது. இதையொட்டி தமிழகத்தில் இந்தத் தொழிலுக்கு சிறப்புச் சலுகைகளை இந்த அரசு அளிக்கும். இதன் மூலமாக சென்னைப்பகுதி இந்தியாவின் "டெட்ராயிட்டாக" மாறும் நிலை மலர்ந்திருக்கிறது.

23. தமிழகத்தை விரைவாகத் தொழில் மயமாக்குவதற்கு, தேவையான அறிவுரை நல்கவும், தொழிலதிபர்களுடன் சீரான கருத்துப் பரிமாற்றத்துக்கு வழி வகுக்கவும் முதலமைச்சர் தலைமையில் ஓர் உயர்மட்டக் குழுவை இந்த அரசு அமைத்துள்ளது. அறிவிக்கப்பட்ட தொழில் மயப்பகுதிகளில் தொழிற்சாலைகள் விரைவில் வருவதை ஊக்குவிப்பதற்காக தொழில்மயப்பகுதி வளர்ச்சி உயர்மட்டக் குழுமங்கள் அமைக்கப்பட்டு

இப்பகுதிகளில் ஒரு முனைத் தீர்வு முனையம் செயல்பட வழிவகை செய்ய ஒரு சட்ட முன் வடிவை இந்த அரசு நடப்புக் கூட்டத் தொடரிலேயே கொண்டுவரும்.

24. மாநிலத்தின் தீவிர தொழில் வளர்ச்சிக்கு மின்சார உற்பத்தி மிக முக்கியமானது என்பதை அறிந்துள்ள அரசு, மின்சார உற்பத்தியில் தனியார்துறை பங்கு கொள்வதை ஊக்குவிக்கும் கொள்கையை தொடர்ந்து பின்பற்றி வருகின்றது. இந்த இனத்தில் கடந்த காலத்தில் சிற்சில முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், மனநிறைவான முன்னேற்றம் ஏற்படவில்லை. இந்த அரசு மேற்கொண்ட தீவிர தொடர் முயற்சிகளின் பலனாக நான்கு தனியார் தொழில் முனைவோருடன் மின்சாரம் வாங்குவதற்கான ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது. தமிழகத்தில் 20 இடங்களில் குறுகிய கால மின் உற்பத்தித் திட்டங்களில் தனியார் பங்கு கொள்வது சம்பந்தமாக தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (TIDCO) விடுத்த ஒப்பந்தப்புள்ளி அழைப்புக்கு மிக நல்ல வரவேற்பு கிடைத்து 73 ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இவற்றின் மீது அரசு விரைவில் முடிவெடுக்கும்.

25. சென்னை மாநகருக்குள் உள்ள நீர் வழிகளை தூய்மைப்படுத்த ஒரு திட்டத்தை மேற்கொள்ள அரசு முடிவு செய்துள்ளது. இதனால் சென்னை மாநகருக்குள் தாழ்வான பகுதிகளில் மழைநீர் தேங்குவதைக் குறைக்கவும், சுற்றுப்புற சூழலின் தரத்தை உயர்த்தவும் முடியும். முதல் கட்டமாக, கூவம் ஆற்றிலும், பக்கிங்காம் கால்வாயிலும் ஏற்படும் தூய்மைக் கேட்டைக் குறைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இதற்கான திட்டத்தை விரைந்து செயல்படுத்த உயர்மட்டக் குழு ஒன்றை அரசு அமைத்துள்ளது.

26. மாநிலத்தில் காடு வளத்தை அதிகரிக்கும் நோக்கத்துடன், இந்த அரசு ஜப்பான் நாட்டு நிதிஉதவி அமைப்புடன் வெற்றிகரமாக பேச்சு வார்த்தை நடத்தி, ரூ424 கோடி கடனுதவியுடன் ஐந்தாண்டு காலத்தில் நிறைவேற்றும் வகையில் ஒரு மாபெரும் வனவளத்

### அட்டைப்பட விளக்கம்

**முதலாம் அட்டை:**

மேதகு தமிழக ஆளுநர் திரு. கிருஷ்ணகாந்த் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆற்றிய உரை (22.1.97)

**இரண்டாம் அட்டை:**

சென்னைத் தீவுத்திடலில் அகில இந்திய சுற்றுலாப் பொருட்காட்சியினை மாண்புமிகு முதல்வர் கலைஞர் திறந்து வைத்தார்.

**நான்காம் அட்டை:**

சேலம் பெங்களூர் அகல இரயில் பாதை துவக்க விழாவில் மாண்புமிகு பிரதமர் திரு. தேவேகௌடா, மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் (11.1.97)



சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்ற திருவள்ளுவர் திருநாளில் முனைவர் கு. மோகனராசு விற்கு திருவள்ளுவர் விருதினை மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் வழங்கினார் (14.1.97).

திட்டத்துக்கு ஒப்புதல் பெற்றுள்ளது. சந்தனமரக் கடத்தலை இந்த அரசு தீவிரமாகத் தடுத்துள்ளது. மேலும், சந்தனமர ஏலத்தின் மூலம் இந்த ஆண்டு, இதுவரை இல்லாத அளவுக்கு, ரூ.47 கோடி வருவாய் அரசுக்குக் கிடைத்துள்ளது.

27. காவிரி நதிநீர்ப் பிரச்னைக்கு ஒரு நிரந்தரத் தீர்வு காண்பதற்குத் தேவையான எல்லா முயற்சிகளையும் இந்த அரசு தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றது. உச்ச நீதிமன்றத்தின் விருப்பத்திற்கிணங்க, ஓர் இடைக்கால ஏற்பாடாக, நடப்பு ஆண்டு சாகுபடிக்கான நீரை கர்நாடகத்திலிருந்து பெறுவதற்காக தமிழ்நாடு கர்நாடக முதலமைச்சர்கள் இதுவரை ஐந்து சுற்றுப் பேச்சு வார்த்தை நடத்தியுள்ளனர். சென்ற 5.1.1997 அன்று நடந்த இறுதிச் சுற்றுப் பேச்சு வார்த்தை வெற்றியடையாததால், காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பினைப் பெற ஆவன செய்ய இந்த அரசு முடிவெடுத்துள்ளது. காவிரி நடுவர்மன்றத்தின் தலைவர் விலகியதால் நடுவர்மன்றப் பணிகள் 1.7.1996 முதல் தடைப்பட்டன. இது குறித்து தமிழக முதலமைச்சர் அவர்கள் தலையிட்டு பாரதப் பிரதமருடன் பேசியதையடுத்து, மைய அரசு உச்ச நீதிமன்ற நீதிபதி திரு. என். பி. சிங் அவர்களைக் காவிரி நடுவர்மன்றத் தலைவர் பதவிக்கு நியமித்தது. இந்த அரசு காவிரி பாசனப் பகுதிக்குத் தேவையான

தண்ணீரை, முறைப்படி கர்நாடகத்திலிருந்து பெறுவதற்கு எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும்.

28. தமிழகத்தில் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் மாதாந்திர அரிசித் தேவை 2.25 லட்சம் டன்களாக உயர்ந்துள்ளது. மைய அரசு, வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள குடும்பங்களுக்கு மட்டும்தான் மையத் தொகுப்பிலிருந்து மான்ய விலை அரிசி வழங்கப்படும் என்ற புதிய திட்டத்தை அறிவித்துள்ளது. இதனால் மையத் தொகுப்பிலிருந்து நமக்குக் கிடைத்துவரும் அரிசி ஒதுக்கீட்டின் அளவு கணிசமாகக் குறையுமோ என்ற ஐயப்பாட்டினை எழுப்பி, எப்போதும் தரப்படும் அளவு தரப்படவேண்டுமென மைய அரசிடம் நமது முதலமைச்சர் வலியுறுத்தியுள்ளார். எனவே நிலைமையை சமாளிக்க, போதுமான கையிருப்பை வைத்திருக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த முயற்சிகளில் ஒன்றாக, காவிரி பாசனப்பகுதியில் ஏகபோகக் கொள்முதல் முறை கொண்டுவரப்பட்டுள்ளது. இதனால் காவிரி பாசனப்பகுதி விவசாயிகளின் நலன் பாதிக்கப்படக் கூடாது என்ற நல்லெண்ணத்தில் அவர்களுக்கு வழங்கப்படும் உற்பத்தி ஊக்கத் தொகையை குவிண்டாலுக்கு ரூ.50 ஆக உயர்த்தியும், தரவெட்டுத் தொகையை (Grade cut) குவிண்டாலுக்கு ரூ.15லிருந்து ரூ.5 ஆகக் குறைத்தும் ஆணையிடப்பட்டுள்ளது.

29. பொது விநியோகத் திட்டத்தின் பலன்கள் ஏழை எளிய மக்களுக்கு முழுமையாகச் சென்றடையும் வகையில் திட்டம் சீரமைக்கப்படும். அதன்படி, வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள மக்களுக்கு சிவப்பு நிற அட்டை வழங்கப்படும். அவர்களுக்கு தற்போது பொது விநியோகத் திட்டத்தில் வழங்கப்படும் அனைத்து பொருட்களும் வழங்கப்படும். பொதுவிநியோகத் திட்டத்தை உபயோகிக்காத வசதியுள்ள மக்கள் ( Affluent Sections) பலர் உள்ளனர். அவர்களுக்கு பச்சை நிற அட்டைகள் வழங்கப்படும். இப்பிரிவைச் சார்ந்த மக்களுக்கு அரிசியைத் தவிர மற்ற பொருட்கள் வழங்கப்படும். இந்த இரண்டு வகையிலும் சேராத ஒரு பிரிவினர் அரிசிக்குப் பதிலாக, கூடுதலாக சர்க்கரை அல்லது மண்ணெண்ணெய் வேண்டும் என்று கோருகிறார்கள். அவர்களது தேவையை நிறைவேற்றும் வகையில், அவர்தம் விருப்பத்தின் அடிப்படையில் அரிசிக்குப் பதிலாக 3 கிலோ சர்க்கரையோ அல்லது 5 லிட்டர் மண்ணெண்ணெயோ வழங்கப்படும். அவர்களுக்கு வழங்கப்படும் அட்டை மஞ்சள் நிறமுடையதாக இருக்கும். அனைத்து மாநகராட்சிப் பகுதிகளிலும் 1997 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் புதிய குடும்ப அட்டைகள் வழங்கும் பணி துவங்கி, இந்தப் பணி மாநிலம் முழுவதிலும் அடுத்த சுதந்திர நாளுக்கு முன்பாக முடிக்கப்பட்டுவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

30. பொது விநியோகத் திட்டத்தில்

முறைகேடுகளைத் தவிர்க்கவும், திட்டத்தின் செயல்பாட்டை மேம்படுத்தவும், சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள், நுகர்வோர் அமைப்புக்களின் பிரதிநிதி ஆகியோர் அடங்கிய ஒரு குழு நியமிக்கப்பட்டு, அந்தக்குழு பிற மாநிலங்கள் சிலவற்றில் பொது விநியோகத் திட்டம் செயல்படும் முறையை ஆராய்ந்து, நம் மாநிலத் திட்டத்தை மேம்படுத்தத் தக்க பரிந்துரைகளை 9.1.1997 அன்று முதல்வரிடம் அளித்துள்ளது.

31. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் நல்வாழ்வுக்கு, குறிப்பாக அவர்களுக்கு கல்வி, பொருளாதார முன்னேற்றம், அடிப்படை வசதிகளை அளித்தல் ஆகியவற்றில் சீரிய தொடர்முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்தத் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீட்டை இந்த அரசு கணிசமாக உயர்த்தியுள்ளது. இந்தத் திட்டங்களின் சாதனை இலக்குகளை அடைவதில் அக்கறை காட்டுவது மட்டுமின்றி, இத்திட்டங்களின் தரத்தை உயர்த்துவதிலும், அவை உரியவர்களுக்கு முறைப்படி சேர்வதிலும் இந்த அரசு கவனம் செலுத்தும்.

32. மீனவர்களின் நலனில் அரசு மிகுந்த அக்கறை கொண்டுள்ளது. சென்ற ஆளுநர் உரையில் குறிப்பிட்டுள்ளபடி, மீனவர்களுக்கு ஆண்டுதோறும் 4000 குடியிருப்புகள் கட்டும் மாபெரும் திட்டம் இந்த ஆண்டும் தொடரப்படும். இந்தக் குடியிருப்புப் பகுதிகளில் அடிப்படை வசதிகள் செய்து தருவதற்கு அரசு முயற்சி மேற்கொள்ளும். புயல் போன்ற காலங்களில் ஆழ் கடல் நடுவே சிக்கித் தவிக்கும் மீனவர்களுக்கு உதவும் முகத்தான், 25 சதவீத மான்யத்தில் 1500 மீன்பிடி படகுகளில் "வாக்கி டாக்கி" கருவி வழங்கப்படும். நம் மாநில அப்பாவி மீனவர்கள் கடலில் மீன்பிடிக்கச் செல்லும்போது இலங்கை இராணுவம் அடிக்கடி தாக்குதல் நடத்துவதுபற்றி இந்த அரசு ஆழ்ந்த கவலை கொண்டுள்ளது. அண்மையில் நடந்த வன்முறை தாக்குதல்கள் பற்றி மைய அரசின் கவனத்திற்கு இந்த அரசு கொண்டு சென்றுள்ளது. 1974இல் கச்சத் திவு ஒப்பந்தம் ஏற்பட்டபோது, கச்சத்திவிற்கு அருகில் தமிழ்நாடு மீனவர்களுக்கு மீன் பிடிக்கின்ற உரிமையும், கச்சத் திவுக்கு தமிழ்நாட்டிலிருந்து யாத்திரைசெல்கின்ற உரிமையும் உண்டு என்ற ஷரத்து அந்த ஒப்பந்தத்தில் இடம் பெற்றிருந்தது. பின்னர் 1976இல் தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட்ட பிறகு என்ன காரணத்தாலோ அந்த ஷரத்து செயல்படாமல் ஆக்கப்பட்டுவிட்டது. மீண்டும் அந்த ஷரத்தை செயல்படுத்தி, பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமென்று மைய அரசை தமிழக அரசு தொடர்ந்து வலியுறுத்தும். நம்மாநில மீனவர்களின் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வு காண எல்லா நடவடிக்கைகளையும் எடுப்பதாக மைய அரசு உறுதி அளித்துள்ளது. இத்திங்கள் 17ஆம் நாள் டெல்லியில் மாநில அரசு அதிகாரிகளும், மத்திய அரசு அதிகாரிகளும் கலந்து கொண்ட கூட்டத்தில்,

தமிழக முதலமைச்சர் அவர்களும், மத்திய வெளி உறவுத் துறை அமைச்சர் அவர்களும் இந்தப் பிரச்சினை குறித்து விவாதித்துள்ளனர்.

33. அரசின் திட்டங்களைத் திறம்பட நிறைவேற்றுவதிலும், திட்டங்களின் பயன்கள் உரியவர்களை அடையச் செய்வதிலும் அரசு அலுவலர்களின் பங்கின் முக்கியத்துவத்தை அரசு உணர்ந்துள்ளது. எனவே ஐந்தாவது மத்திய ஊதியக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் மத்திய அரசுப் பணியாளர்களுக்கு நிர்ணயிக்கப்படும் சம்பள வீதங்கள் மாநில அரசுப் பணியாளர்களுக்கும் வீண் கால தாமதமின்றி வழங்கப்படும் என்பதை இந்த அரசு மீண்டும் உறுதி செய்கிறது.

34. இந்த மாமன்றத்தில் நீங்கள் நடத்தப்போகும் விவாதங்களும் கருத்துரைகளும் உங்கள் அனுபவத்தையும், நாட்டு மக்களிடையே உங்களுக்கு உள்ள தொடர்பினையும் பின்னணியாகக் கொண்டு இருக்கும் என்றும், இந்த விவாதங்களின் பலனாக இந்த மன்றத்தில் எடுக்கப்படும் முடிவுகள் தமிழக மக்களுக்கு நன்மை அளித்து, அவர்களின் சமூக, பொருளாதார வளர்ச்சிக்கு விரைவாக வழிவகுக்கும் தன்மையனவாக இருக்கும் என்றும் நம்பிக்கையோடு இந்த உரையை நிறைவு செய்கிறேன்.

**வணக்கம்**

(மேதகு தமிழக ஆளுநர் திரு. கிருஷ்ணகாந்த் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 22.1.97 அன்று ஆற்றிய உரை)



## மாணவர்கள் வரலாற்றை உருவாக்க வேண்டும்!

இன்றைய உலகத்தில் இளைஞர்கள்- அதிலும் குறிப்பாக இந்தியாவில், அதிலும் சிறப்பாகத் தமிழகத்தில் எப்படி வளர்ந்திட வேண்டும், எப்படி தங்கள் வாழ்க்கையை அமைத்துக்கொள்ள வேண்டும் என்பதிலே அதிக ஆர்வம் கொண்டவனாக, அக்கறை கொண்டவனாக இருக்கின்ற காரணத்தால், அந்த இளைஞர்களுடைய எழுச்சிக்கு நீங்கள் முன்வந்து, அந்த எழுச்சியை உருவாக்க வேண்டுமென்ற அறிவுரையை அன்பாக உங்கள் முன் வைக்க நான் விரும்புகிறேன்.

இளைஞர்கள் தான் இன்றைக்கு உலகத்திலே பல அற்புதங்களை நிகழ்த்துகின்ற ஆற்றலாளர்களாக இருக்கின்றார்கள்; எனவேதான் இளைஞர்களுக்கு அந்த அழைப்பை நான் விடுக்கிறேன்.

இலக்கியங்களை அடிப்படையாக வைத்து, நாமே ஒரு வரலாற்றை இன்றைக்கு உருவாக்கிக் கொண்டிருக்கின்றோம். ஆனால் உண்மையான வரலாறு தொடர் வரலாறு எழுதப்பட்ட வரலாறு தமிழர்க்கு இல்லை. இனியாவது அதிலே சோடை போகாமல் இருக்க வரலாறு எழுதப்பட வேண்டும்.

அந்த வரலாற்றை வரலாற்றுப் பேராசிரியர்கள் எழுதுகிறார்கள்- எழுதுவார்கள் என்பதல்ல. அந்த வரலாற்றுக்குரிய கதாநாயகர்கள் யார் என்றால் அந்தக் கதாநாயகர்களாகத் தான், மாணவமணிகளே, நீங்கள் எல்லாம் எதிர்காலத்திலே உருவாக வேண்டுமென்று உங்களுக்கெல்லாம் அந்த வரலாற்றுக்கு அழைப்பு விடுக்கிறேன்".

**-தாம்பரம் சென்னை கிறித்துவக் கல்லூரி மாணவர் பேரவை தொடக்க விழாவில் மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் (6.1.1997)**

# மருத்துவக் கட்டுரை:

# முதுகுவலி

**ந**ம்மில் பெரும்பாலோர் நமது முதுகையே மறந்துவிடுகிறோம். என்றாவது ஒரு நாள் முதுகில் வலி வந்தால் மட்டுமே முதுகைப்பற்றிய நினைப்பே வருகிறது. எப்போது மனிதன் நேராக நிற்கத் தொடங்கி சமூகத்தின் முதுகெலும்பாக மாறினானோ அப்போதே அவனுடைய முதுகு பாதிப்பு அடையத் தொடங்கியது.

நம்முடைய நெருங்கிய உறவினரான மனிதக் குரங்குகளுக்கு இந்த முதுகு வலிப் பிரச்சினை இல்லை. ஏனென்றால், அது நான்கு கால்களால் நடக்கிறது. அதனால் அதன் உடல் பாரம் முழுவதும் முதுகெலும்பை அழுத்துவதில்லை.

கீழ் முதுகுவலி என்பது உலகில் பொதுவாகக் காணப்படுகிறது. அதாவது 10




டாக்டர் எஸ். சிவமுருகன்.
டாக்டர் எஸ். ரவிசுப்ரமணியன்
டாக்டர் சவுந்தரபாண்டியன்




பேர்களில் எட்டு பேர்களுக்கு இந்த உபாதை இருக்கிறது. முதுகுவலியைப் பற்றிப் பல தவறான செய்திகள் பரப்பப்பட்டு வருகின்றன. முதுகுவலியைக் குணப்படுத்தும் முறைகளிலும் பலவிதக் குழப்பங்கள் இருந்து வருகின்றன. இந்தக் கட்டுரை, சில எளிமையான முறைகளை வகுத்துத்தந்து செயல் படுத்த உதவுகிறது.

**எப்போதும் நேராக நிமிர்ந்து அமரப் பழகுங்கள், முதுகைக் கூனி வளைத்து உட்காருவதைத் தவிருங்கள்**

நாம் நேராக நிமிர்ந்து நிற்கும்போது நமது தண்டுவடம் இயற்கையாக மூன்று வளைவுகளை மட்டுமே கொண்டிருக்கும். இந்த வளைவுகளைக் கழுத்துப்புறடியில் உள்ள தசைகள், முதுகுத்தசைகள், வயிற்றுப் பகுதியிலுள்ள தசைகள் தாங்கிப் பிடித்துக் கொள்கின்றன.

நிமிர்ந்து நேராக நிற்கும் செய்கையால் இந்த மூன்று தசைகளும் சரியானபடி

செயல்படுகின்றன. சுவர் ஓரத்தில் நின்று, நீங்கள் கூட உங்கள் முதுகைவைத்து இதைச் சோதித்தறியலாம். அப்படி நீங்கள் நிற்கும் போது, உங்கள் முதுகுக்கும் சுவருக்கும் இடையில் குறைந்த அளவே இடைவெளி இருக்கும். அந்த இடைவெளி அதிகமாக இருக்குமேயானால் உங்களுக்குக் 'கூன்முதுகு' வந்துவிட்டது என்று உணரவேண்டும்.

இந்தப் பிரச்சினை பெருவாரியான இளைஞர்களுக்குத் தங்களின் இளமையின் தொடக்க காலத்தில் வந்துவிடுகிறது. இளம் பிராயத்தினருக்கு - குறிப்பாக உயரமான ஆண்கள், பெண்கள் தங்கள் உயரத்தைக் குறுக்கிக் கொண்டு நின்று பழகுவதால் இந்தக் கூன் முதுகு வந்துவிடுகிறது. பொதுவாகக் குள்ளமானவர்கள் நேராக நிமிர்ந்து நின்று தாங்கள் உயரமாக இருப்பதாகக் காட்டிக் கொள்ள முயற்சிப்பதால் அவர்களில் இந்தப் பிரச்சினை மிகவும் குறைவு. நாம் உடம்பை நேராக வைத்துக்கொள்வதன்

மூலம் கூன்முதுகைத் தவிர்க்கலாம்.

**உங்கள் எடையைக் குறையுங்கள்**
**தினமும் உடற்பயிற்சி செய்யுங்கள்**

பானை வயிறும், முதுகு வலியும் நெருங்



கிய நண்பர்கள் என்பது பழமொழி. உடற்பயிற்சி செய்யாமல் சோம்பி இருத்தல், அளவுக்கு அதிகமாக உண்ணுதல் ஆகிய இரண்டு செயல்களும் உங்களின் மோசமான எதிரிகளாவர். தொடர்ந்து முறையான உடற்பயிற்சி செய்வதன் மூலம் நமது உடல் எடையைச் சீராக்கிக் கொள்ளலாம். குறிப்பாக முதுகுப் பகுதிகளுக்கெனத் தனியாக ஒரு சில உடற்பயிற்சிகளைச் செய்து வர வேண்டும். படிப்படியாக அந்த உடற்பயிற்சிகளை அதிகரித்துக் கொண்டே வரலாம்.

பெரும்பாலோர் முதுகு வலி வந்த பின்னரே இத்தகைய உடற்பயிற்சிகளைச் செய்யத் தொடங்குகின்றனர். இது தவிர்க்கப்பட வேண்டும். அதாவது, வலி எடுக்கும் போது எந்த உடற்பயிற்சியும் செய்யக்கூடாது.

**படுத்து ஓய்வு எடுப்பது முதுகு வலியைக் குறைக்கும்**

படுத்தபடியே இருந்து நல்ல ஓய்வு எடுக்கும்போது முதுகு வலி குறைந்துவிடும். பெருவாரியான நபர்களுக்கு ஒழுங்கற்ற அசைவுகளினால் வலி வருகிறது. இன்னும் சிலர் அசையாமல் இருந்துவிடுவதாலேயே முதுகு வலி வந்துவிடுகிறது. இதற்குக் காரணம் தசைகளின் பிடிப்புதான் என்கிறார்கள். இதற்கு இளஞ்சூடு ஒத்தடம் கொடுத்தால் வலி குறைந்துவிடும். அல்லது தசையை 'மசாஜ்' செய்யலாம். அல்லது 'இபுருபான்' போன்ற வலிபோக்கும் மாத்திரைகளை எடுத்துக்கொள்ளலாம்.

**டாக்டரை ஏன் அழைக்கவேண்டும்?**

முதுகுவலி கொஞ்சம்கூடக் குறையவில்லை என்றால் ஒரு நல்ல டாக்டரிடம் உடம்பைக் காட்ட வேண்டும். முதுகுவலி அல்லது மிகவும் கடுமையான எந்த வலியாக இருந்தாலும், மூன்று வாரங்களுக்குள் குறையவேண்டும். அப்படி வலி குறையவில்லையென்றாலோ, கால்வலி, இருமல் தும்மல் அல்லது வலி அதிகரித்தாலோ நீங்கள் அவசியம் டாக்டரை அணுக வேண்டும். இந்த வலி அறிகுறிகள் உங்கள் முதுகுத் தண்டு உள்ள அடுக்கு எலும்புகள் பிசகி இருக்கலாம் என்பதை அறிவுறுத்தக் கூடியவையேயாகும். தண்டுவடத்தில் ஒன்றின் மேல் ஒன்றாக இவை அடுக்கப்பட்டுள்ளன. அடுக்கு எலும்புகள் அதிர்வுகளைத் தாங்கக் கூடியவை. அவைகளில் மெல்லிய சளி போன்ற ஒரு பொருள் நடுவே இருக்க அதைச் சுற்றிலும் நல்ல உறுதியான எலும்பால் சுற்றி அமைக்கப்பட்ட ஒரு பகுதியும்

உள்ளன. நாம் கனமான பொருள்களைத் தாறுமாறாகக் குனிந்து தூக்கும்போது முதுகுவடத்திலுள்ள மெல்லிய சளி போன்ற பொருளை அழுத்துகிறது. அழுத்தம் தாங் காமல் அது பிதுங்கிக் கொண்டு வெளியே வருகிறது. இதனால் அதன் அருகில் உள்ள நரம்பு மண்டலம் தாக்கப்பட்டு கால்களில் வலி உண்டாகிறது.



இன்னொரு வகையிலும் முதுகுவலி உண்டாகிறது. அதாவது, முதுமையினால் தண்டுவடத்தின் மையப் பகுதியிலுள்ள மெல்லிய சளிப்பகுதியிலுள்ள ஈரத்தன்மை காய்ந்துவிடுவதால், எலும்புகள் கடினமாகி முதுகுத் தண்டு குனிய மறுக்கிறது. இதனால் முதுகுவலி ஏற்படுகிறது. இதற்கு ஒஸ்டோர்த் ராசிஸ் (Ostearthrosis) என்று பெயர்.

**இந்த வலிகளிலிருந்து தீர்வு காண்பது எப்படி?**

**பயிற்சி - 1**

அ) படுக்கையில் இருந்தபடி ஓய்வு எடுத்தல்.

ஆ) ஒத்தடம் கொடுத்தல்.

இ) மருந்துகள் உட்கொள்வதன் மூலம்.

சில நோயாளிகளுக்குப் 'படுக்கை ஓய்வு' கொடுப்பதற்காக மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படுகிறார்கள். நவீன கருவிகள் வந்துவிட்ட இக்காலத்தில் பெரும்பாலான வலிகளைப் போக்கிவிட முடிகிறது.

**பயிற்சி - 2**

எப்போதும் நிமிர்ந்த நேரான நடை, நிமிர்ந்து அமர்தல் போன்றவைகளினாலும், முறையான உடற்பயிற்சியினாலும் முதுகு வலியைப் போக்கமுடியும்.

**பயிற்சி - 3**

வீடு அல்லது பணிபுரியும் இடங்களில் சிறுசிறு மாற்றங்களைத் தொடர்ந்து செய் வதன் மூலம் முதுகுத் தண்டின் பளுவைக் குறைத்து வலியைப் போக்கலாம். தொடர்ந்து உடற்பயிற்சியும் செய்து வரவேண்டும்.

**மேற்சொன்ன எல்லா வழிமுறைகளுமே கைகொடுக்கவில்லை என்றால் அறுவைச் சிகிச்சைதான் வழி**

மேற்சொன்ன எல்லா வழிமுறைகளும் சரிப்பட்டு வரவில்லை என்றால், அறுவைச் சிகிச்சை செய்துகொள்வதைத் தவிர வேறுவழியில்லை. முதுகுவலிக்காக ஒரே ஒரு சதவீத நோயாளிக்கே அறுவைச் சிகிச்சை செய்யப்படுகிறது. அதுவும், தண்டுவடத்தில் ஏதாவது கட்டி ஏற்பட்டால் - அல்லது நரம்பு



மண்டலம் பாதிக்கப்பட்டு அதனால், சிறு நீர்ப்பைக் கோளாறு தோன்றினால் எல்லாப் புறமருத்துவ முறைகளும் தோல்வி யுற்றால் மட்டுமே அறுவைச் சிகிச்சை செய்யப்படு கிறது. இந்த அறுவைச் சிகிச்சையால், உடைந்த அடுக்கு எலும்புகள் சரிசெய்யப்படுகின்றன. இது எளிமையான ஒரு அறுவைச் சிகிச்சை தான். இந்தச் சிகிச்சைக்குப் பிறகு, பெரும் பாலான நோயாளிகள் கால் வலி குணமா வதை எதிர்நோக்கலாம். மற்றொரு அறுவைச் சிகிச்சைக்கு ஸ்பாண்டிலோலிதீசிஸ் (Spondy-lolithesis) என்று பெயர்.

அதாவது, முதுகெலும்பில் உள்ள அடுக்கு எலும்புகள் இயல்புக்கு மாறாக நகர்ந்தாலோ அல்லது அசையாமல் இறுகிவிட்டாலோ இந்த அறுவைச் சிகிச்சை செய்யப்படுகிறது.

**மாற்றுச் சிகிச்சை முறைகள்**

முதுகுவலிக்கு வேறு மாற்றுச் சிகிச்சை முறைகளில் தீர்வுகாணமுடியும் என்று சிலர் நம்புகின்றனர். ஆனால் அறிவியல் முறைப் படி அவைகள் நிரூபிக்கப்படவில்லை. இது போன்ற மாற்றுச் சிகிச்சைகள் செய்பவர்கள்



கைதேர்ந்த நிபுணர்களாக இல்லாவிடில் விளைவுகள் விபரீதமாகலாம். பொதுவாகக் கழுத்துப் பகுதிகளில் உள்ள நரம்பு மண்டலத்தை முடுக்கிவிடுவதன் மூலம் இந்தச் சிகிச்சைகள் செய்யப்படுகின்றன. ஆனால், அதிகமான முதுகெலும்புத் தண்டுவடம் பாழ்படுவது கழுத்துப்புற நரம்புகளில் ஏற்படும் பாதிப்பு களால்தான் என்று கண்டறியப் படுகிறது. இருப்பினும், நிறைய நோயாளிகள் இந்த மருத்துவ முறையில் நல்ல பலனையும் கண்டுள்ளனர்.

பயமே பல நோய்களுக்கு அடிப்படையாக இருக்கிறது. குறிப்பாக முதுகுவலிக்கு இது பெரிதும் காரணமாக இருக்கிறது. இதனால்.



சிலர் தங்களின் அன்றாட நடவடிக்கைகளைக்கூட முடக்கிக்கொண்டு வருகின்றனர். இன்றும் சிலர் ஏதோ வழவழப்பான முட்டையின் மேல் நடைபோடுவது போல் பயந்து நடக்கின்றனர்.

கவலை, மேலும் மேலும் நோயை அதிகப்படுத்துகிறது. உணர்ச்சி மேலீட்டால் ஏற்படும் இறுக்கம், முதுகுத் தசைகளைக் கடுமையாக்குகிறது. இதனால் கழுத்துவலி, முதுகுவலி போன்றவை ஏற்படுகின்றன. உங்களில் பலர் இந்தக் கட்டுரையைப் படிக்கும்போது உடற்பயிற்சிகள் மற்றும் முதுகுவலி வருவதற்கான காரணங்கள் சொல்லப்படுகின்றன. ஆனால், எத்தனைப் பேர் அதை அப்படியே கடைப்பிடிக்கப் போகிறோமோ தெரியவில்லை. ஆனால் பெரும்பான்மையானவர்கள் இதை அப்படியே படித்து, பிறகு விட்டுவிடுவார்கள். மற்றவர்கள், தாங்கள் அமர்கிற, நடக்கிற நிலையைச் சரிசெய்து கொண்டு உடற்பயிற்சிக்காக நேரம் ஒதுக்கிச் செய்வதால் அவர்களுக்குக் கழுத்துவலியோ அல்லது முதுகுவலியோ வர வாய்ப்பில்லை. இதில்



எந்தப் பிரிவில் நீங்கள் வருகிறீர்கள்? உங்களுடைய முடிவுக்கே விட்டுவிடுகிறோம்!

**நன்றி: 'இந்து' நாளிதழ்**

□□

## ஒரே வேலை ஒரே கூலி

**விவசாயத் தொழிலில் ஈடுபட்டுள்ள பெண் தொழிலாளிகளுக்கும் ஆண் தொழிலாளிகளுக்கு இணையாக ஊதியம் வழங்க தக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்று அனைத்து மாநில அரசுகளையும் வலியுறுத்துவோம் என்று மத்திய தொழிலாளர் நலச் செயலாளர் அண்மையில் தெரிவித்துள்ளார்.**

**ஜெனீவாவில் அண்மையில் நடைபெற்ற 90 நாடுகளிலிருந்து வந்து கலந்து கொண்ட பன்னாட்டு அளவிலான மாநாட்டில் விவசாயத்தில் ஈடுபட்டுள்ள ஆண், பெண் இரு பாலாருக்கும் சமமான ஊதியம் வழங்க வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப் பட்டுள்ளது.**



# எங்கள் ஊர் பிரச்சினை

### பிரச்சினை

எங்கள் ஊரில் ஆரம்ப சுகாதார நிலையக் கட்டிடம் கட்டப்பட்டு 5 வருடங்களுக்கு மேல் திறக்கப்படாமலே உள்ளது. ஊர் மக்கள் அனைவரும் நோய் கண்டுவிட்டால் அதனைக் குணப்படுத்த சுமார் 5 கி.மீ. தூரம் செல்லவேண்டி உள்ளது. மேலும் அப்படி செல்லும்போது பேருந்தில் பயணம் செய்ய வேண்டி உள்ளதால் பேருந்திற்கு காத்து நிற்க வேண்டியுள்ளது. ரோடு சரியில்லாததால் பேருந்து ஒரு சமயம் தவராமல் போய் விடுகிறது. அல்லது காலம் கடந்து வருகிறது. எனவே சரிவர ஆரம்ப சுகாதார நிலையம் செல்ல முடியாமல் போய்விடுகிறது. எனவே தாங்கள் எங்கள் ஊரில் கட்டப் பட்டுள்ள ஆரம்ப சுகாதார நிலையம் உடனே திறக்க வழி செய்ய வேண்டும் என்று பணிவன்புடன் கேட்டுக்கொள் கிறேன்.

அ.பழனிச்சாமி,
டி.புதுப்பாளையம்
விழுப்புரம்-இராமசாமி
படையாட்சியார் மாவட்டம்.

### தீர்வு

**கடிதத்தில் கேட்டுள்ளபடி இடையூர்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு உள்ளிட்ட புதுப்பாளையம் துணை சுகாதார நிலையம் இயங்கி வருகிறது. இந்தத் துணை சுகாதார நிலையத்தில் சுகாதார செவிலியர் திருமதி அலைஸ் கனகமணி அவர்கள் 16.1.90 முதல் தாய்சேய் நலப்பணிகளைச் செய்து வருகிறார்.**

**துணை சுகாதார நிலையத்திலேயே தங்கி தம் பணிகளைச் செய்ய சுகாதார செவிலியர்களுக்குத் தக்க அறிவுரை வழங்குமாறு விழுப்புரம் துணை இயக்குநர் அவர்கள் ஏற்கனவே கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்.**

இயக்குநர்,
பொது சுகாதாரம் மற்றும்
நோய் தடுப்பு மருந்து
இயக்ககம், சென்னை-6.

### பிரச்சினை

நான் கலசாங்குடி கிராமம், செம்பனூர் பஞ்சாயத்து காளையார் கோவில் ஒன்றியம் பசும்பொன் மாவட்டம், சிவகங்கை வட்டத்தைச் சேர்ந்தவன். எங்கள் ஊரில் சுமார் 250 பேர் வாழ்கின்றனர். எங்களின் முக்கிய கோரிக்கை குடிதண்ணீர் பிரச் சினையாகும். எங்கள் ஊரில் ஒரு அடி குழாய் மட்டுமே உள்ளது. எங்கள் ஊரில் ஒரு பள்ளிக்கூடம் உள்ளது. அந்தப் பள்ளிக்கூடக் குழந்தைகள் மதிய உணவு உண்டு கை கழுவுவதற்கும், குடிப்பதற்கும் ஒரு கிலோ மீட்டர் சென்று அங்குள்ள அடி குழாயைப் பயன்படுத்துகின்றனர். எனவே எங்களின் பள்ளிக்கருகில் ஒரு அடிகுழாய் ஒன்று போட்டுத் தருமாறு கேட்டுக் கொள்கிறோம். அதோடு தெரு விளக்குகள் மூன்று சுமார் 4 ஆண்டுகளாக சரி செய்யப் படாமல் உள்ளது. எனவே, தெரு விளக் கைச் சரி செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

எஸ். நெடுஞ்செழியன்
கலசாங்குடி கிராமம்
சிவகங்கை 630 561

### தீர்வு

**செம்பனூர் ஊராட்சி கலசாங்குடி கிராமத்தில் தெருவிளக்கு மூன்று உள்ளன. அதில் 2 தெருவிளக்கு நன்றாக எரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேற்படி கிராமத்தில் ஒரு அடிகுழாய் நல்ல நிலையில் இயங்குகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.**

ஆணையாளர்
ஊராட்சி ஒன்றியம்,
காளையார்கோவில்



## பிரச்சினை

தரங்கை வட்டம், காலமநல்லூரில் மின்சாரம் சரியாக கிடைப்பது இல்லை. காரணம் குறைந்த மின் அழுத்தம். வீட்டில் குழல் விளக்குகள் எரிவதே இல்லை. கம்பி மட்டும் பழுத்து பல்புகள் எரியும். தெரு விளக்குகள் எரிந்து 10 ஆண்டுக்கு மேலாகி விட்டது. தெருக்களில் இருள் சூழ்ந்து தெருக்களில் பல சிரமங்களும், நடக்கக்கூட முடியாத நிலையும் உள்ளது. விஷ ஜந்துக்கள் தொல்லை வேறு. நாங்கள் பல முறை இது பற்றி முறையிட்டும் முறையான நடவடிக்கை இல்லை. எங்கள் பகுதிக்கு சீரான மின்சாரம் கிடைக்க ஆவன செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்.

ஜி. பக்கிரிசாமி,
இளைஞர் நற்பணி மன்றம்
மன்றம், காலமநல்லூர்.

## தீர்வு

**மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள காலமநல்லூர் செல்லும் மின்பாதை 5 கம்பிகளாக மாற்றப்பட்டு மின் சப்ளை சரி செய்யப்பட்டுள்ளது. மேலும் குறைவான மின்னழுத்தக் குறையை நீக்குவதற்காக ஒரு புதிய 63 கே வி ஏ மின்மாற்றி அமைக்க அனுமதி பெறப்பட்டுள்ளது. விரைவில் பணி மேற்கொள்ளப்பட்டு மேற்கண்ட குறை நிவர்த்தி செய்யப்படும் என்று தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.**

பொறிஞர் சி. சுப்ரமணியமன், பி.ஈ.,
எப்.ஐ.ஈ., சி. இன்ஜினியரிங்
மேற்பார்வை பொறியாளர்,
நாகை காயிதே மில்லத் மின்
பகிர்மான வட்டம்
நாகப்பட்டினம்.

## பிரச்சினை

எங்களது ஊரான பாரூர் கிராமம் சுமார் 7000 மக்கட்தொகைக் கொண்டது. அரசு மேல்நிலைப்பள்ளி, அரசு மருத்துவமனை, காவல்நிலையம், சார்பதிவகம், இந்தியன் வங்கி, அஞ்சல் நிலையம், பொதுப்பணித் துறை அலுவலகம் ஆகியவைகளைக் கொண்டதாகும். இருப்பினும் அடிப்படை வசதியான பேருந்து வசதி இதுவரை கிடையாது. மேலும் எங்களது போச்சம் பள்ளி, வட்டாட்சியர் அலுவலகத்திற்குச் செல்ல பாரூர், கீழ்குப்பம், புங்கம்பட்டி, மோட்டுப்பட்டி, பண்ணந்தூர் இதர பல கிராம மக்கள் அவதிப்படுகின்றனர். வட்டம் பிரித்து ஓராண்டு ஆகியும் அலுவலகம் சென்றுவர ஒரு பேருந்து வசதிகூட இல்லாத நிலைமையில் உள்ளோம். இதை பலமுறை எடுத்துக்கூறியும் எங்கள் குறை நிறைவேற்றப்படவில்லை. எனவே தாங்கள் மேற்கண்ட வழித்தடங்களில் பேருந்துகளை இயக்க உதவிபுரியும்படி அன்புடன் வேண்டுகிறோம்.

பாரதியார்
பாரூர் தருமபுரி மாவட்டம்

## தீர்வு

**மனுவில் கோரியுள்ளபடி பாரூர் கிராமத்தின் வழியாக கீழ்க்கண்ட பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.**

**1. தருமபுரி - பாரூர் தடம் எண்.23 8 நடைகள்**
**தருமபுரி மோட்டுப்பட்டி வழி பாரூர் 4 நடைகள்**

**2. தருமபுரி - புங்கம்பட்டி தடம் எண். 23ஏ**

**3. கிருஷ்ணகிரி - பாரூர் தடம் எண். 31 8 நடைகள்**

**4. கிருஷ்ணகிரி - பாரூர் தடம் எண். 47 6 நடைகள்**

**5. கிருஷ்ணகிரி - பாரூர் தடம் எண். 50 4 நடைகள்**

**6. ஊத்தங்கரை - பாரூர் தடம் எண். 50 4 நடைகள்**
**வழி கீழ்குப்பம், போச்சம்பள்ளி**

**7. தருமபுரி திருப்பத்தூர் வழி அரசம்பட்டி,**
**பாரூர், நாகரசம்பட்டி, போச்சம்பள்ளி 6 நடைகள்**

**8. தருமபுரி திருப்பத்தூர் வழி அரசம்பட்டி,**
**பாரூர், கீழ்குப்பம், போச்சம்பள்ளி 4 நடைகள்**

**எனவே பேருந்து வசதி கோரியுள்ள பாரூர், கீழ்குப்பம், புங்கம்பட்டி மற்றும் மோட்டுப்பட்டி கிராமங்களுக்கு பாரூரிலிருந்து வட்டாட்சியர் அலுவலகம் போச்சம்பள்ளிக்கும் அன்னை சத்யா போக்குவரத்துக்கழக பேருந்துகளும், தனியார் பேருந்துகளும் இயக்கப்பட்டு வருகின்றன என்பதை அன்புடன் தெரிவித்துககொள்கிறோம்.**

மேலாண்மை இயக்குநர்,
அன்னை சத்யா போக்குவரத்துக் கழகம்
தருமபுரி.

## பிரச்சினை

எனது கிராமத்தில் சுமார் 10 ஆயிரம் மக்கள் வாழ்கின்றனர். இதில் 75 சதவிகிதம் மக்கள் கல்வி அறிவு பெற்றவர்கள். நூல்நிலையம் இல்லாமல் கஷ்டப்பட்டு வருகிறோம். என் போன்ற பல இளைஞர்கள் படித்துவிட்டு வேலைவாய்ப்பைப் பெற இயலாமல் உள்ளது. காரணம் எங்கள் ஊரில் தனியாக மக்கள் அதிகமாக தமிழ்ப் பத்திரிகைதான் வாங்குகிறார்கள். ஆங்கில நாளேடு யாரும் வாங்குவதில்லை. ஆங்கில நாளேட்டில்தான் படித்தவர்களுக்கு அதிக விபரம் கிடைக்க உள்ளது. தயவு செய்து எங்கள் ஊரில் நூல்நிலையம் அமைக்க உதவுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

அ. அனந்தவேலு
வாரியங்காவல்
செந்துறை வட்டம்
திருவள்ளூர்

## தீர்வு

**5000க்கும் மேற்பட்ட மக்கட்தொகை கொண்ட கிராமங்களில் ஊர்ப்புற நூலகம் திறக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. ஆனால் இவ்வரசாணையில் மேற்குறிப்பிட்ட மேல்நாரியப்பனூர் கிராமம் இடம் பெறவில்லை.**

**எனினும் அவ்வூர்ப் பொதுமக்கள் கீழ்க் காணும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்து தரும் பட்சத்தில், பகுதிநேர நூலகம் திறக்க ஆவன செய்யப்படும்.**

**1. நூலகம் உடனடியாகத் திறக்க வாடகை மற்ற இலவசக் கட்டடம்.**

**2. பிற்காலத்தில் இந்நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டக் குறைந்தபட்சம் 5 செண்ட் காலிமனை.**

**3. குறைந்தபட்சம் 200 உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும்.**

**4. குறைந்தபட்சம் ரூ.2000 மதிப்புள்ள தளவாடங்கள் தரப்பட வேண்டும்.**

**5. குறைந்தபட்சம் ரூ.1000 செலுத்தி இரண்டு புரவலர்கள் சேர்க்கப்பட வேண்டும்.**

**மேற்கூறிய நிபந்தனைகளை வாரியங்கால் கிராமப் பொதுமக்கள் நிறைவேற்றித் தரும் பட்சத்தில், திருச்சிராப்பள்ளி மாவட்ட நூலக அலுவலருடன் தொடர்பு கொண்டால், பகுதி நேர நூலகம் திறக்க ஆவன செய்யப்படும் என அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.**

இரா. கண்ணன்,
பொது நூலக இயக்குநர்
சென்னை - 2

## பிரச்சினை

பழனி நகரில் செயல்பட வேண்டிய 'பொதுசுகாதார துறை துணை இயக்குநர் அலுவலகம்' இதுவரை 60 கி.மீ. தொலைவில் உள்ள திண்டுக்கல் நகரில் செயல்பட்டு வருகிறது. பழனி கோட்டத்தில் செயல்பட்டு வரும் 30 ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் 168 துணை சுகாதார நிலையங்களின் பணிகளை மேற்பார்வையிட்டு, நோய்த் நோய்த்தடுப்பு நடவடிக்கைகளை கவனிக்க வேண்டிய கடமை இந்த அலுவலகத்திற்கு உண்டு. ஆனால், இந்த முக்கிய அலுவலகம், பழனி கோட்ட எல்லைக்குள் செயல்படாமல் தொலைவிலிருந்து செயல்படுவதால், சரியான முறையில் ஆரம்ப சுகாதார நிலையங்களும் துணை சுகாதார நிலையங்களும் பணியாற்றுவதில்லை. இது குறித்து இப்பகுதி மக்களின் பல முறையீடுகளுக்கு பிறகு, மேற்படி அலுவலகம் பழனிக்கு மாற்றப்பட வேண்டும் என்று 4.1.96 தேதியில் அரசு உத்தரவிட்டது. (G.O. (D) No.15, dated 4.1.1996, Health and Family Welfare Department) அரசாணை பிறப்பிக்கப்பட்டு ஒன்பது மாதங்களுக்குப் பிறகும், இன்னும் அந்த பழனி நகருக்கு மாற்றப்படாமல் தொடர்ந்து திண்டுக்கல் நகரிலேயே இருந்து வருகிறது. சில அரசு அலுவலர்களின் வசதிக்காக, பொதுமக்கள் நலன் புறக்கணிக்கப்பட்டு வருவது வருந்தத்தக்கதாக உள்ளது. எனவே இது குறித்து உரிய அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு சென்று, அரசு உத்தரவுக்கேற்ப பொது சுகாதாரத்துறை துணை இயக்குநர் அலுவலகத்தைப் பழனி நகருக்கு மாற்றிட ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

நா. புகழேந்தி, ஜோதி
ஆயக்குடி அஞ்சல், பழனி வட்டம்

## தீர்வு

**பழனி துணை இயக்குநர் நலப்பணிகள் அலுவலரின் அலுவலகம் கீழ்கண்ட முகவரியில் 27.11.96 முதல் செயல்பட்டு வருகிறது என தெரிவித்துக் கொள்கிறேன்.**

துணை இயக்குநர்
நலப்பணிகள் அரசு மருத்துவமனை வளாகம்
பழனி, திண்டுக்கல் அண்ணா மாவட்டம்,
**இயக்குநர்:** பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து

### சாகித்ய அகாதமி விருது பெற்ற

# அசோகமித்திரன்

### நேர்காணல்

**தமிழரசு:** பணத்துக்காக எழுதப்படும் இக்காலத்தில் தமிழ் மணத்துக்காக, 1996-ஆம் ஆண்டின் சாகித்ய அகாதமி விருது பெற்ற தங்களுக்குத் தமிழரசு வாசகர்கள் சார்பாக வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். உங்களின் எந்த நூலுக்காக அந்த விருது கிடைத்துள்ளது?

**அசோகமித்திரன்:** 'அப்பாவின் சிநேகிதர்' என்ற சிறுகதைத் தொகுப்புக்கென அறிவிப்பு வந்தது. ஆனால், இத்தகைய பரிசுகள் ஆயுட்காலப் பங்களிப்பைக் கவனித்தே தரப்படுகிறது என நாம் கொள்ள வேண்டும்.

**தமிழரசு:** இதற்கு முன் தங்கள் எழுத்துக்கள் அங்கீகரிக்கப்பட்டு பரிசுகள், விருதுகள் பெற்றிருக்கிறீர்களா?

**அசோகமித்திரன்:** கடந்த பத்து ஆண்டுகளில் சில பரிசுகள், விருதுகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. சாந்தோம் விருது, நல்லிணக்க விருது, இலக்கியச் சிந்தனை விருது, அட்சர விருது முக்கியமானவை.

**தமிழரசு:** தங்களுக்கும், உங்கள் எழுத்துக்கும் வயது எவ்வளவு ஆகிறது?

**அசோகமித்திரன்:** 1953ல் நான் எழுதிய ஒரு மணி நேர வானொலி நாடகமாகிய 'அன்பின் பரிசு' என் முதல் தமிழ்ப் படைப்பு, முதல் தமிழ்ச் சிறுகதையாகிய 'நாடகத்தின் முடிவு' 1957-ல் வெளிவந்தது. முதல் நாவலாகிய 'கரைந்த நிழல்கள்' 1967-ல் வெளிவந்தது. என் தொடக்க காலத்தில் அகிலன், நா.பா., மு.வ. முதலானோர் பிரதான உரைநடை எழுத்தாளர்களாக விளங்கினார்கள்.

**தமிழரசு:** சிலர் தங்கள் எழுத்துக்கள் வாசகருக்கு ஒரு பாடமாக விளங்க வேண்டும், என்கிற ஒரு வேட்கையோடு எழுதுகிறார்கள். இன்னும் சிலர் போக்கு வேறு மாதிரியாக இருக்கிறது. நீங்கள் எந்த வட்டத்துக்குள் வருகிறீர்கள்?

**அசோகமித்திரன்:** அனைத்து மனிதரும் மதிக்கத்தக்கவர்கள், ஒவ்வொரு மனிதனும் கவனம் பெற வேண்டும் என்பது என் வாழ்க்கை நோக்கு. இச்செய்தி என் கதைகள் மூலம் பிறருக்குச் சென்றடைந்தால் மகிழ்ச்சி அடைவேன்.

**தமிழரசு:** உதாரணமாக, சிலர் எழுதுகிற எழுத்துக்கள் யாருக்குமே புரிவதில்லை. இன்னும் சிலரின் படைப்புகளில் விரசங்கள் மலிந்து கிடக்கின்றன. வேறு சிலர் ஆங்கிலச் சொற்களைக் கலந்தால்தான் தங்கள் எழுத்து நிறைவு பெறுகிறது என்பது போல் எழுதுகிறார்கள். இது பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

**அசோகமித்திரன்:** எழுத்தின் வீச்சு சில ஆயிரம் வாசகர்களுடன் அடங்கி விடுகிறது. கோடிக் கணக்கில் மக்களை எட்டிச் செல்வாக்கு பெற்ற சினிமாத் துறையில் தாங்கள் குறிப்பிட்டிருப்பது போன்ற படைப்பாளிகள் அரசால் பரிசு, விருது, பட்டம், பொற்கிழி தரப்படுகிறார்கள். பத்திரிகைகளாலும் சபாக்களாலும் பாராட்டு விழா எடுக்கப்படுகிறார்கள்.

**தமிழரசு:** இலக்கியத்தின் இன்னொரு வடிவமான இன்றைய சினிமாவின் போக்கு பற்றி உங்கள் கருத்து. உங்களின் ஒரு கதைகூட தொலைக்காட்சியில் படமாக்கப்படுவதாகச்செய்திகள் வந்துள்ளன.



**அசோகமித்திரன்:** உண்மைதான். இரு சிறுகதைகள் தொலைக்காட்சியில் இடம் பெற்றிருக்கின்றன. ஆனால் சினிமா, இலக்கியத்தின் இன்னொரு வடிவம் அல்ல என்பது என் கருத்து. அந்த வடிவத்துக்கு என் படைப்புகள் ஏற்றதல்ல என்று தான் நான் நினைக்கிறேன்.

**தமிழரசு:** இன்றைய தமிழ் சினிமாப் படங்கள் பல மொழிகளுக்கு மொழி மாற்றம் செய்யப்படுகிற அளவுக்கு வளர்ந்து வருகின்றன. இதுபோல், இலக்கியத்தில் வளர்ச்சி இருக்கிறதா- திருக்குறள், பாரதி, புதுமைப் பித்தன் போன்றவர்களின் படைப்புகளைப் போல.

**அசோகமித்திரன்:** தமிழ் சினிமாவில் தொழில் நுணுக்கம் வளர்ச்சி பெற்றிருக்கிறது. இந்த வளர்ச்சி மிகச் சிறிய நாடுகளாகிய பிலிப்பைன்ஸ், நியுசிலாந்து,ஹாங்காங் போன்ற இடங்களிலும் இன்னும் அதிக அளவில் காணப்படுகிறது. உதிரியாகப் பல நவீன தமிழ்ச் சிறுகதைகளும், கவிதைகளும் பல அயல் பல்கலைக்கழக வெளியீடுகளில் இடம் பெற்றிருக்கின்றன.

**தமிழரசு:** ஒரு இரவீந்திரநாத் தாகூருக்குப் பிறகு நோபல் பரிசு வாங்கும் அளவுக்கு வேறொருவர் தோன்றவில்லையே, ஏன்?

**அசோகமித்திரன்:** நோபல் பரிசுக் குழுவினர் கணிப்புக்கு ஏற்ற படைப்பு இங்கு தோன்றவில்லை என்று தான் நாம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

**தமிழரசு:** இன்று தமிழகத்தில் மலர்ந்துள்ள புதிய அரசு, இது வரை இல்லாத வகையில் புதிதாய் தமிழ், பண்பாடு வளர்ச்சிக்கென ஒரு புதிய அமைச்சகத்தையே தந்துள்ளது பற்றி?

**அசோகமித்திரன்:** நல்ல முயற்சியே. சோவியத் அரசின் செயல்பாடுகளும், அனுபவங்களும் இவ் விஷயத்தில் நினைவுகூரத்தக்கவை.

**தமிழரசு:** நீங்கள் படைத்த பாத்திரங்களுடன் கைகோர்த்து உலா போவதுண்டா? அவர்களில் உங்கள் மனதில் தங்கிவிட்ட பாத்திரத்தைப் பற்றிச்சொல்லுங்கள்?

**அசோகமித்திரன்:** பாத்திரங்களோடு ஒன்றிப்போகும் பழக்கம் எனக்கில்லை. எனக்குப் பிடித்த பாத்திரங்கள் பற்றித்தான் நான் எழுதுகிறேன்.

**தமிழரசு:** வளர்ந்துவரும் எழுத்தாளர்களுக்கு நீங்கள் சொல்ல விரும்புவது என்ன?

**அசோகமித்திரன்:** இலக்கிய மைல் கற்கள் எம்மொழியினுடையதாயிருந்தாலும் தேடிப்பிடித்துப் படிக்க வேண்டும். 'தமிழரசு' மூலமாகத் தமிழ்நாட்டின் வாசகர்களை எட்டுவதில் மட்டற்ற பெருமை அடைகிறேன். என் படைப்புகள் அவர்களுக்குச் சிறிதளவாவது மகிழ்ச்சி அளிக்குமானால் நான் மனநிறைவு அடைவேன்.

**தமிழரசு:** கடைசியாக, எத்தனையோ வருமானம் தரக் கூடிய தொழில்கள் இருக்கும் போது, சொற்ப அளவே வருமானம் வரக்கூடிய இந்த எழுத்தைப் பிடித்துக் கொண்ட உங்களுக்கு வீட்டில் எந்த அளவுக்கு வரவேற்பு இருக்கிறது?

**அசோகமித்திரன்:** சில விஷயங்களில் நாம் 'பழங்கணக்கு' பார்க்கக்கூடாது.

**தமிழரசு:** நன்றி. வணக்கம்.

●●

சந்திப்பு: எம்.வி.எம். அசோகன்

சிறுகதை



# மௌனம்

## அசோகமித்திரன்

மால்கம் ஸ்காட் அன்றும் எரிச்சல் மிகுந்துதான் இருந்தான். அவன் இந்தியாவுக்கு வந்து இரு மாதங்களுக்குள் நிறைய ஏமாற்றங்கள்.

இங்கிலாந்திலிருந்து கப்பலில் பம்பாய் வந்திறங்கி மதராஸுக்குச் சௌகரியமாகவும், சீக்கிரமாகவும் இரயிலில் போய்ச் சேர்ந்துவிடலாம் என்றிருந்தான். நான்கு வாரக் கப்பல் பயணத்திற்குப் பிறகும் அவனுடைய மனைவியால் உண்ட உணவு வயிற்றில் தக்க வைத்துக்கொள்ள முடியவில்லை. பம்பாயில் பெருவாரி நோய் என்று கப்பல் இலங்கைக்குத் திருப்பப்பட்டது. அங்கிருந்து மதராஸ் வந்தது.

பதவி உத்தரவு பெற்றுக் கொள்ள ஸ்காட் சென்னைக் கோட்டைக்குச் சென்றபோது, கவர்னர் வெளியூர் சென்றிருந்தார். அவர் திரும்பி வந்தபோது, ஸ்காட்டுக்கு டிபுடி கலெக்டர் பதவி தான் தரப்பட்டது. அதுவும் திருநெல்வேலி ஜில்லா. தம்பதியுடன் அங்குப் போய்ச் சேர்ந்தபோது பேய் மழை. முதல் நாளன்றே படுக்கையறையில் ஒரு சடைப் பூராண் தென்பட்டது. அந்தப் பயத்தில் ஸ்காட்டின் மனைவி ஒரு வாரம் சுரமாகப் படுத்துவிட்டாள்.

பதினைந்து நாட்கள் கழித்துக் கிடைத்த சமையற்காரன் மகிம்தாஸ் மூக்கைச் சிந்தி அடுப்பில் போடும் பழக்கம் கொண்டவனாக இருந்தான். அது ஒவ்வொரு முறையும் அடுப்பில்தான் விழும் என்று என்ன நிச்சயம்?

ஊர்த் தெருவெல்லாம் ஒரே புழுதியும், சாணமும் வீட்டில் ஒரு பங்காக் (பழங்கால) கூரை விசிறி தான். படுக்கையறையில் புழுங்கித் தவிக்க வேண்டும். ஒரே திருப்திகரமான விஷயம் ஸ்காட்டுக்குக் கொடுக்கப்பட்ட மூன்று குதிரைகளும் நல்ல குதிரைகள். இரண்டு சாரட்டு வண்டிக்கு மூன்றாவது டிபுடி கலெக்டர் இன்ஸ்பெக்ஷன் போவதற்கு.

அன்று அவனுக்கு இன்ஸ்பெக்ஷன் முறை. ஐந்து கிராமங்களுக்குத் தண்டோரா போட்டாகி விட்டது. டிபுடி கலெக்டர் தங்க ஏற்பாடு செய்யப்பட்டது. நாகனூர் சாலையில் இருந்த இன்ஸ்பெக்ஷன் பங்களா. அதைச் சுற்றிலும் அத்துவானம்.

மனைவியிடம் "புது இடம்!

**இக்கதை நடந்திருந்தால் சுமார் 90 ஆண்டுகளுக்கு முன்பு நிகழ்ந்திருக்க வேண்டும். இந்தக் கதையில் துரை, துரையின் கைத்தடி, குதிரை, குட்டையில் குளித்துக் கொண்டிருந்த பெண் இப்பகுதிகள் நிஜம்.**

தூங்கிப் போய்விடாதே!" என்று சொல்லிவிட்டு டவாலி (சீருடை அணிந்த சேவகன்) முன்னால் ஓட குடுமி வைத்த குமாஸ்தா பின் தொடர்ந்து வர, ஸ்காட் குதிரை மீதேறி கிராமத்தை அடைந்தான்.



அவனைக் கண்டு நாய்கள் குரைத்தன. தெருவோரத்தில் குழந்தைகள் அசுத்தம் செய்திருந்தன. கிராமத்துப் பெரியவர்கள் ஸ்காட்டை வரவேற்றுப் பலாச்சுளையும், இளநீரும் கொடுத்தார்கள். பட்டும் படாததுமாகத் துரைசாணி அம்மாவுக்கு என்று ஒரு முழுச் சவரனையும் டிபுடி கலெக்டரிடம் சேர்ப்பித்தார்கள்.

இந்தியா பற்றி மெக்காலே எழுதிய ஒவ்வொரு வரியையும் ஸ்காட் படித்திருந்தான். முக்கியமாக மகாராஜா நந்தகுமார் என்ற 'ஹிண்டு பிராமின்' பற்றிக் கவனமாகப் படித்திருந்தான். ஸ்காட்டுக்குக் குடுமி வைத்தவர்கள் எல்லோரும் 'பிராமின்'களாகத் தென்பட்டார்கள். தென்னிந்தியா பூராவும் ஒரே குடுமி.

வெயில் அதிகரித்திருந்ததால், ஸ்காட் குதிரையை மெதுவாக ஓட்டினான். குமாஸ்தா சங்கரலிங்கத்திடம் கூறினான் "இந்த நாடு இவ்வளவு காட்டுமிராண்டி என்று தெரியாது."

ஐந்து மொழிகள் கற்றறிந்த சங்கரலிங்கம் புன்னகை புரிந்தான். ஸ்காட்டுக்கு உற்சாகம் பொங்கியது. "நடுத்தெருவில் கழியும் இரண்டு கால் பிராணிகளை இங்கேதான் பார்க்க முடிகிறது." என்றான்.

சங்கரலிங்கம் இன்னொரு புன்

னகை தந்தான்.

“மாட்டை வணங்குவது, ஆட்டை வணங்குவது, மரத்தை வணங்குவது, கல்லை வணங்குவது. இந்த மக்களுக்குக் கதி மோட்சமே கிடையாது”

சங்கரலிங்கத்திடம் இன்னொரு புன்னகை.

“இப்போதுதான் பார்த்தாயே, கிராமத்துப் பெரியவர்களை! ஒருத்தனாவது உடம்பு மூடிக் கொண்டிருந்தானா? நல்லவேளை ஸேம் ஸாப் என் கூட வரவில்லை. வந்திருந்தால் கூக்குரலிட்டிருப்பாள்.”

சங்கரலிங்கத்திடம் மாறாத புன்னகை.

“ஆண்கள் இப்படியென்றால் பெண்கள் இன்னும் மோசம். மூட வேண்டியதை மூடுவதில்லை. எங்கெல்லாமோ துணியைச் சுற்றிக் கொள்வது.”

அப்போது அவர்கள் கிராமத்திலிருந்து மிகவும் தள்ளியிருந்த குளத்தோரமாகச் சென்று கொண்டிருந்தார்கள். “இது என்ன குட்டை?” என்று ஸ்காட் கேட்டான்.

“இது எங்களூர் குளம்.”

“என்ன?”

“இது என் ஊர். இந்தக் குளத்தில்தான் நான் பிறந்ததுமுதல் குளித்து வருகிறேன்.”

“இந்த ஆபாசத் தண்ணீரிலா? ஒரு படித்துறை கூட இல்லையே!” அந்நேரத்தில் ஒரு பெண் அங்கே துணி துவைத்துக் கொண்டிருந்தாள். ஸ்காட்டுக்கு உற்சாகம் பொங்கி வழிந்தது. குதிரையோடு குளத்தில் இறங்கி நேராக அந்தப் பெண்ணிடம் சென்றான்.

“வேண்டாம், மாஸ்டர்,” என்று சங்கரலிங்கம் சொன்னான்.

“இது என்ன ஐந்து? ஆணா, பெண்ணா,?” ஸ்காட் தன் கைத்தடியை நீட்டினான். அந்தப் பெண் பயந்து கொண்டு தண்ணீரில் உட்கார்ந்து கொண்டாள்.

“வேண்டாம், மாஸ்டர் வேண்டாம்,” என்று சங்கரலிங்கம் சொன்னான்.

“இது என்னவென்று பார்த்து விடுகிறேன்” என்று சொல்லியபடி ஸ்காட் அவனுடைய கைத்தடியால் அப்பெண்ணின் புடவை நுனியைத் தூக்கினான். அப்பெண் அலறி எழுந்தாள்.

“இது பெரிய தப்பு” என்று சங்கரலிங்கம் சொன்னான்.

“இதற்கு ஆண், பெண் வெட்கம் அடக்கம் ஒன்றும் வித்தியாசம் தெரியாது. பெண் நாயும் இதுவும் ஒன்று தான்”.

“மாஸ்டர்! மாஸ்டர்!” என்று சங்கரலிங்கம் கத்தினான்.

“இன்ஸ்பெக்ஷன் பங்களாவுக்கு ஓடி வந்துவிடு. நான் போய் சிறிது ஓய்வெடுத்துக் கொள்கிறேன்” என்று கூறிவிட்டு ஸ்காட் குதிரையைத் தட்டிவிட்டான். குதிரை விரைந்தது.

**அ**ரை மணிக்குள் இன்ஸ்பெக்ஷன் பங்களாவைச் சுற்றி நிறைய கிராமத்தார்கள். பயங்கர ஆயுதங்கள் ஒன்றும் கிடையாது. தடி, கட்டை போன்றது தான். அவ்வப்போது மிகவும் மிருதுவாகக் கசமுசா சப்தம். அந்தச் சப்தமின்மை அவர்கள் வீட்டைச் சுற்றி நிற்பதைக் காட்டிலும் பயம் எழுப்புவதாக இருந்தது. மிஸஸ் ஸ்காட் ஒரு கதவை சிறிது திறந்து பார்த்துவிட்ட உடனே கதவைச் சாத்தினாள். ஒரே ஒரு கல் அந்தக் கதவு மீது விழுந்தது. அப்போது சங்கரலிங்கம் ஓடி வந்தான்.

அவனுக்காகக் கூட்டம் பாதை விட்டது. அவன் பங்களாக் கதவைத் தட்டினான். “நான்தான் குமாஸ்தா சங்கரலிங்கம்.” கதவு சிறிது திறந்தது. அவன் உள்ளே நுழைந்ததும் மூடிக் கொண்டது.

உள்ளே துரைசாணி அம்மாளின் முகம் வெளிறிப் போயிருந்தது. ஸ்காட்டு நிலையும் அதிகம் வித்தியாசம் இல்லை. அவனுடைய கைத்துப்பாக்கியில் தோட்டாக்களை நுழைத்துக் கொண்டிருந்தான்.

“மாஸ்டர், அதை மட்டும் பயன் படுத்திவிடாதீர்கள்.”

“என்ன பயமுறுத்துகிறாய், மேன்?..... இந்தக் காட்டுமிராண்டிகளால் என்ன பண்ண முடியும்?”

“அப்பா நான் போகிறேன்.”

“எங்கே போகிறாய், ஸ்கவுண்டிரல்! நான் உன்னைப் போகச் சொல்லவில்லை”

சங்கரலிங்கம் ஒரு மூலையில் உட்கார்ந்துகொண்டான்.

ஒரு கல் வந்து ஜன்னலை

**சமையற்காரன் மகிம்தாஸ் மூக்கைச் சிந்தி அடுப்பில் போடும் பழக்கம் கொண்டவனாக இருந்தான். அது ஒவ்வொரு முறையும் அடுப்பில் தான் விழும் என்று என்ன நிச்சயம்?**



**"மாட்டை வணங்குவது, ஆட்டை வணங்குவது, மரத்தை வணங்குவது, கல்லை வணங்குவது. இந்த மக்களுக்குக் கதி மோட்சமே கிடையாது"**



உடைத்தது. ஸ்காட் துப்பாக்கியோடு அந்த ஜன்னல் பக்கம் ஓடினான். ஆனால், அவனை அவன் மனைவி தடுத்தாள். "வேண்டாம், வேண்டாம்."

"இந்தக் காட்டுமிராண்டிகளுக்கு ஒரு பாடம் கற்பிக்கவேண்டும்."

"வேண்டாம். எனக்கு என்னவோ அவர்கள் முகங்களைப் பார்த்தால் பயமாக இருக்கிறது. அவர்கள் மௌனம் மிகவும் பயமாக இருக்கிறது!"

ஸ்காட்டும் உடைந்த சன்னலடியில் குனிந்து கொண்டு கூட்டத்தைப் பார்த்தான். அவர்கள் முகங்கள் கல்லால் செய்யப்பட்டவை போலிருந்தன. அப்படி இருப்பது கருணையைக் குறிக்கலாம். அறியாமையைக் குறிக்கலாம். அக்கறையின்மையைக் குறிக்கலாம். கொலை வெறியைக் குறிக்கலாம்.

"ஏய்!" என்று ஸ்காட் கூப்பிட்டான். இருந்த இடத்திலிருந்தே சங்கரலிங்கம் புருவத்தை உயர்த்தினான்.

"அவர்கள் எதற்கு அங்கு குழுமியிருக்கிறார்கள் என்று கேட்டு வா. அவர்களைச் சுட்டுத் தள்ளி விடுவேன் என்று சொல்."

சங்கரலிங்கம் வெளியே போனான். கசமுசா சப்தம் சிறிது அதிகரித்தது. அவன் திரும்பப் பங்களாவுக்குள் சென்றவுடன் மீண்டும் நிசப்தம் நிலவியது.

ஸ்காட் பதட்டத்துடன் கேட்டான். "ஏன் அவர்கள் சப்தம் ஒன்றும் செய்யாமல் இருக்கிறார்கள்?"

"அவர்கள் கிராமத்துப் பெண் ஒருத்தியை நீங்கள் அவமதித்து விட்டீர்கள். அதற்குப் பழிவாங்க வந்திருக்கிறார்கள்.''

மிஸஸ் ஸ்காட், "ஐயோ'' என்றாள். "பழியா! என்ன பழி?" என்று ஸ்காட் கேட்டான்.

"அவர்கள் வழக்கத்தின்படி அந்த ஆளை அடித்துக் கொன்று விடுவார்கள். சாவின்போது மௌனம் அனுஷ்டிக்க வேண்டுமல்லவா?"

"அவர்களைச் சுட்டுத் தள்ளுகிறேன்."

"செய்யலாம். அனால், எவ்வளவு பேரை? இருநூறு பேருக்கு எதிராக ஒரு துப்பாக்கியால் என்ன செய்ய முடியும்?"

மிஸஸ் ஸ்காட் கணவனின் முழங்காலைக் கட்டிக்கொண்டாள். "போ! மன்னிப்புக் கேட்டுக் கொள். எனக்கு அவர்கள் மௌனம் பயங்கரமாக இருக்கிறது!"

ஸ்காட் ஜன்னல் வழியாகப் பார்த்தான். அந்த இருநூறு பேரும் கற்சிலைகள் போல நின்று கொண்டிருந்தார்கள். பறவைகள் ஒலியும், இலைகள் சலசலப்பதும் கேட்டது.

ஸ்காட் திரும்பினான். அவன் முகத்தில் இரத்தம் அனைத்தும் கீழிறங்கிச் சவம் போலக் காட்சி அளித்தான்.

"நான் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்."

"இது அவ்வளவு எளிதில் முடிந்துவிடும் என்று தோன்றவில்லை. எதற்கும் கேட்டு வருகிறேன்'' என்று சங்கரலிங்கம் வெளியே சென்றான். சிறிது கசமுசா சப்தம். சங்கரலிங்கம் பங்களாவுக்குத் திரும்பினான். மீண்டும் கூட்டம் உறைந்தது.

"என்ன?" என்று ஸ்காட் கேட்டான்.

"அவர்கள் ஒத்துக் கொள்ளவில்லை."

"நான் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன். அந்தப் பெண்ணுக்குப் பணம் தருகிறேன்."

"பயன்படாது."

"என்னதான் வேண்டும் என்கிறார்கள்?"

சங்கரலிங்கம் ஒரு நிமிஷம் பேசாமல் இருந்தான். பிறகு சொன்னான், ''அவர்கள் கிராமத்துப் பெண்ணை அவமதித்ததற்காக உங்கள் இனப் பெண்ணைப் பதிலுக்கு அவமதிக்க வேண்டும் என்கிறார்கள்."

"இங்கு யார் இருக்கிறாள் வெள்ளைக்காரப் பெண்?"

"உங்கள் மனைவி இருக்கிறாளே?"

மிஸஸ் ஸ்காட் அலறினாள்.

"இந்தக் கிராமத்தையே அழித்து விடுவேன்." என்று ஸ்காட் சொன்னான்.

"அதில் சந்தேகமில்லை. ஆனால் அவர்கள்.... உங்களையும் சேர்த்து இந்தக் கட்டடத்திற்கு இன்னும் ஐந்து நிமிடத்தில் தீ வைப்பதாக இருக் கிறார்கள்."

மிஸஸ் ஸ்காட் மூர்ச்சை போட்டு விழுந்தாள்.

ஸ்காட் கிலி பிடித்து, "நீதான் காப்பாற்றவேண்டும்." என்றான்.

"உங்கள் மனைவியை அவர்கள் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்கச் சொல்லுங்கள்".

ஸ்காட், அவனுடைய மனைவி இருவரும் வெளியே வந்து கிராமத் தார் முன்பு மண்டியிட்டு மன்னிப்புக் கேட்டார்கள். ஸ்காட் அதன் பிறகு ஓராண்டு காலம் அந்த ஜில்லாவில் இருந்தான். இச்சம்பவம் நடந்த தாகவே காட்டிக் கொள்ளவில்லை. ஒரு வார்த்தை உள்ளூர் மக்களை இகழ்ந்து பேசவில்லை.

ஸ்காட் தம்பதிகள் மன்னிப்புக் கேட்டவுடன் சங்கரலிங்கம் அந்தக் குளத்திற்குச் சென்றான். அந்தப் பெண் இன்னமும் துணிமணி

**முகங்கள் கல்லால் செய்யப்பட்டவை போலிருந்தன. அப்படி இருப்பது கருணையைக் குறிக்கலாம். அறியாமையைக் குறிக்கலாம். அக்கறையின்மையைக் குறிக்கலாம். கொலை வெறியைக் குறிக்கலாம்.**



களைத் துவைத்து முடித்த பாடில்லை.

"நீங்க சொன்ன கதையிலே தப்பு இருக்கு தாத்தா!" என்றேன். அவர் எனக்குக் கொள்ளுத்தாத்தா. அவர் வேலையிலிருந்து ஓய்வு பெற்ற அடுத்த நாள் இந்தியா சுதந்திரம் அடைந்தது. "சங்குத் தாத்தாவுக்குச் சுதந்திரச் சங்கு கேட்கக் கொடுத்து வைக்கவில்லை" என்று கூறிக்கொள்வார்.

"என்ன தப்பு?" என்று கேட்டார்.

"குளம் கிராமத்துக்கு வெளியி லேன்னு சொன்னேள்."

"இவ்வளவு ரகளை நடந்த போதும் அந்த அம்மா குளத்திலே துணி தோய்ச்சிண்டிருந்தான்னு சொன்னேள்."

"ஆமாம்."

"அப்போ கிராமத்துக்காரா கிட்டே யார் போய்ச் சொன்னா? யார் அவாளைத் தூண்டிவிட்டா?"

சம்பவம் நடந்து அறுபது ஆண்டு களுக்குப் பிறகும் தாத்தா அங்கும் இங்கும் பார்த்துக் கொண்டார். பிறகு பேசினார்.

"ஸ்காட் என்னைக் குளத்துக் கிட்டே விட்டுட்டு வேகமாப் போயிட்டான்."

இங்கு தாத்தா ஒரு கணம் நிறுத்தினார்.

"நான் அவன் பின்னாலேதான் போயிருக்கணும் - அப்படித்தான் அவன் உத்தரவு. ஆனா அதுக்குப் பதிலா நான் கிராமத்துப் பக்கம் போனேன்."



## மூளை

நம் உடலின் எடையில் 3 சதவிகிதம் எடை கொண்டுள்ள மூளை, நாம் உட்கொள்ளும் காற்றில் 20 சதவீதம் ஆக்சிஜனை எடுத்துக் கொண்டுவிடுகிறது. நமது இரத்த ஓட்டத்தில் 15 சதவீதம் மூளை எடுத்துக்கொள்கிறது.

15 வயது வரை மூளை அதன் உருவத்தில் பெருகுகிறது. அப்போது, கிட்டத்தட்ட 1.4 கிலோ வரை எடை இருக்கும். மூளையின் எடைக்கும் அறிவாற்றலுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை.

70 லிருந்து 80 வயதுக்குள் பெரும்பாலான நியூரான்கள் இறந்துவிடுவதால் பொதுவாக நினைவாற்றலும், படைப்பாற்றலும் குறைந்துவிடுகிறது.

நாம் சிந்திக்காமல் இருக்கும்போதும், மூளை சக்தியை எடுத்துக்கொள்ளும். ஏனென்றால், அதன் நரம்புத் திசுக்களையும், நரம்புக் கட்டமைப்புகளையும் சுறுசுறுப்பாக வைத்திருக்கவே.

நாம் படுத்திருக்கும்போது மனம் நிலை கொள்ளாமல் திரியும். ஆனால் நிற்கும்போது மனம் கட்டுக்குள் வந்து ஒரு நிலைப்பாட்டில் செயல்படும் என்கிறார்கள். அமர்ந்திருக்கும்போது இரண்டு நிலைகளுக்கும் இடைப்பட்டே மனம் இருக்குமாம்.

அறிந்துகொள்வோம் அரசாணை

GOVERNMENT OF TAMIL NADU 1996

# FINANCE (PENSION) DEPARTMENT

**G.O. No. 464, Dated 31st July 1996**
**(Thadhu, Aadi 16, Thiruvalluvar Aandu 2027)**

MEDICAL ALLOWANCE to pensioners/family pensioners-Enhancement of medical allowance to the State Government pensioners/family pensioners including pensioners/family pensioners of local bodies and aided educational Institutions-Orders-Issued.

READ the following:-

1. G.O. Ms.No. 314, Finance (Pension) Department, dated 8-4-1994.
2. G.O. Ms.No. 110, Finance (Pension) Department, dated 16-2-1995.

**ORDER:**

1. In the Government Order first read above, orders have been issued enhancing the rate of medical allowance from Rs. 15/- per mensem to Rs. 30/-per mensem to the State Government pensioners/ family pensioners with effect from 1-4-1994. In the Government Order second read above, orders have been issued enhancing the rate of medical allowance from Rs. 15/-per mensem to Rs. 30/- per mensem to the pensioners/family pensioners of local bodies and aided educational Institutions with effect from 1-1-1995.

2. The Government have now decided to enhance the medical allowance of Rs. 30/-per mensem now paid to the State Government pensioners/family pensioners including the pensioners/family pensioners of local bodies and aided educational Institutions to Rs. 50/- per mensem with effect from 1-12-1995. Accordingly, the Government direct that the medical allowance of Rs. 30/- be enhanced to Rs. 50/- (Rupees fifty only) per mensem to the pensioners/family pensioners including the pensioners/family pensioners of local bodies and aided educational Institutions with effect from 1-12-1995.

3. In respect of pensioners/family pensioners for whom expenditure is met from State funds the expenditure shall be debited under relevant minor sub-heads under the major head "2071. Pensions and Other Retirement Benefits". In respect of pensioners/family pensioners of local bodies for whom expenditure is met from the funds maintained by the Director of Local Fund Audit or Municipal Fund as the case may be the expenditure shall be met from the respective funds referred to above.

4. The Government also direct that the family pensioners whose spouses died in harness and who wish to draw medical allowance till the normal date of retirement of the deceased employees are permitted to exercise option for drawal of this medical allowance within three months from the date of this order. The Pension Disbursing Officers are responsible for obtaining the above option from such family pensioners whose spouses had died in harness and who wish to draw medical allowance. Future family pensioners shall exercise such option within three months from the date of receipt of family pension.

5. **These orders shall also apply to All India Service pensioners and family pensioners who opt for State Medical Reimbursement Scheme.**

**(BY ORDER OF THE GOVERNOR)**

**S.GURUMURTHI,**
**SECRETARY TO GOVERNMENT.**

# நாயக்கர் காலத்து நாணயங்கள் கண்டுபிடிப்பு



வேடசந்தூர் அருகே உள்ள காளனம் பட்டியில் ஒரு தோட்டத்தில் உரக்குழி வெட்டும்போது தங்கக்காசுப் புதையல் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இப் பொற்காசுகள் விஜயநகரப் பேரரசர்கள் காலத்து நாணயங் களாக இருக்கலாம் என்று கருதப் படுகிறது.

காளனம்பட்டியில் இருந்து 6 கிலோமீட்டர் தொலைவில் தாடிக்கொம்பு எனும் ஒரு கிராமம் உள்ளது. மதுரையில் நாயக்கர்கள் ஆண்டபோது, அவர்கள் தாடிக் கொம்பிற்கு வந்து சென்றதாக ஆவணங்கள் உள்ளன. தாடிக்கொம்பில் உள்ள சௌந்தரராஜப் பெருமாள் கோயில், 450 ஆண்டுகளுக்கு முன் விஜயநகரப் பேரரசர்களால் கட்டப்பட்டது. அதன் சிற்பங்கள் மிகவும் புகழ் பெற்றவை. தாடிக் கொம்பு என்ற வார்த்தைக்குத் தெலுங்கில் “பனைமரக் கூட்டம்” என்று பொருளாகும். பனைமரங்கள் அதிகமாக இருப்பதால் இப்பெயர் வந்திருக்கலாம் என்று கருதப் படுகிறது. தாடிக் கொம்பிற்கு வந்துசென்ற அரசர்கள் காளனம்பட்டியைச் சேர்ந்த நபர்களுக்குத் தானமாகப் பொற்காசுகளை வழங்கியிருக்கலாம் என்று தெரிகிறது.

அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள புதையலில் 340 பொற்காசுகள் இருந்தன. ஒவ்வொரு காசும் 350 மில்லிகிராம் எடை உடையதாக இருக்கின்றன. மொத்தக் காசுகளின் எடை 125 கிராம் ஆகும். ஒவ்வொரு காசும் ஒரு சென்டிமீட்டர் விட்டம் கொண்ட வட்ட வடிவிலான அமைப்பைக் கொண்டுள்ளதாக இருக்கிறது. தங்கக் காசின் இருபுறமும் புள்ளிகள் வைக்கப் பட்டுள்ளன. ஒரு “நாமம்” போன்ற வடிவமும் பொறிக்கப்பட்டுள்ளது. இக் காசுகளில் 3:1 என்ற விகிதத்தில் தங்கமும், செம்பும் சேர்க்கப்பட்டுள்ளது. தங்கக் காசுகள் சென்னை தொல்பொருள் அகழ் வாராய்ச்சித் துறையினரிடம் ஒப்படைக்கப் படவுள்ளன.

# தமிழக அரசு விளையாட்டுப் பள்ளிகள்—விளையாட்டு விடுதிகளில் மாணவ/மாணவியர் சேர்க்கை பற்றிய விவரங்கள்

தமிழக அரசு, 1979ஆம் ஆண்டு விளையாட்டுத் துறைக்கென்று தனியாக "இளைஞர் மற்றும் விளையாட்டுப் பயிற்சித்துறை இயக்குநரகத்தை" ஏற்படுத்தியது.

தமிழ் நாட்டில் விளையாட்டுத் துறையை மேம்படுத்த எடுக்கப்பட்ட பல திட்டங்களில் பள்ளிகளில் படிக்கும் மாணவ/மாணவியரின் விளையாட்டுத் திறனை வளர்க்கத் "தமிழ்நாட்டில் விளையாட்டுப் பள்ளிகள்/விளையாட்டு விடுதிகளை" அரசே நிறுவியது.

அப்படி நிறுவப்பட்ட விளையாட்டுப் பள்ளிகள்/விடுதிகள் "தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின்" மேற்பார்வையில் சிறப்பாக இயங்கி வருகின்றன.

தமிழ்நாட்டில் நடத்தப்படும் விளையாட்டுப் பள்ளிகள்/விடுதிகளின் விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன. இவற்றில் எட்டு, ஒன்பது மற்றும் பதினோராம் வகுப்புகளில் சேர விளையாட்டுத் திறமை மிக்க மாணவ, மாணவிகள் இட எண்ணிக்கையைப் பொறுத்துத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

## மாணவர்களுக்கான விளையாட்டுப் பள்ளிகள், பயிற்று மொழி விளையாட்டுகள்

| | | |
|---|---|---|
| 1. ஒய்.எம்.சி.ஏ. கல்லூரி விளையாட்டுப் பள்ளி, நந்தனம், சென்னை - 35 | ஆங்கிலம் மற்றும் தமிழ் | தடகளம், ஹாக்கி |
| 2. எஸ்.ஆர்.கே. மாருதி கல்லூரி விளையாட்டுப் பள்ளி, பெரியநாயக்கன் பாளையம், கோயம்புத்தூர். | தமிழ் | தடகளம், கூடைப்பந்து, வாலிபால் |
| 3. நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவன விளையாட்டுப் பள்ளி, நெய்வேலி | தமிழ் மற்றும் ஆங்கிலம் | தடகளம், கால்பந்து, கிரிக்கெட் |

## மாணவர்களுக்கான விளையாட்டு விடுதிகள்

| | | |
|---|---|---|
| விளையாட்டு விடுதி, அண்ணா விளையாட்டரங்கம் திருச்சி | ஆங்கிலம் மற்றும் தமிழ் | தடகளம், கால்பந்து, வாலிபால் |
| விளையாட்டு விடுதி, அண்ணா விளையாட்டரங்கம், புனித தாமஸ் ரோடு, பாளையங்கோட்டை, திருநெல்வேலி | ஆங்கிலம் மற்றும் தமிழ் | தடகளம், ஹாக்கி, வாலிபால் |
| விளையாட்டு விடுதி. புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். விளையாட்டரங்கம், மதுரை | ஆங்கிலம் மற்றும் தமிழ் | தடகளம், கால்பந்து, கூடைப்பந்து |

## மாணவியருக்கான விளையாட்டு விடுதிகள்

| | | |
|---|---|---|
| விளையாட்டு விடுதி, விளையாட்டரங்கம், தருமபுரி, (உயர்நிலைப்பள்ளி மட்டும்) | ஆங்கிலம் மற்றும் தமிழ் | தடகளம் வாலிபால் |

| | | |
|---|---|---|
| விளையாட்டு விடுதி, வ.உ.சி. விளையாட்டரங்கம், ஈரோடு | தமிழ் மற்றும் ஆங்கிலம் | தடகளம், கூடைப்பந்து, வாலிபால் |

**வழங்கப்படும் இலவச உதவிகள்**

தேர்ந்தெடுக்கப்படும் அனைத்து மாணவ/மாணவியர்களுக்கு உறைவிடமும் மற்றும் உணவுக்காக ஒவ்வொருவருக்கும் மாதம் ரூ.450/ அரசால் செலவிடப்படும். விளையாட்டிற்கான சீருடைகள் மற்றும் உபகரணங்கள் இலவசமாக வழங்கப்படும். தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து மாணவ/மாணவியர் களுக்கு என்.ஐ.எஸ். பயிற்சி பெற்ற பயிற்றுநர் மூலம் தீவிர பயிற்சி அளிக்கப்படும்.

**குறிப்பு:**

கல்வி சம்பந்தப்பட்ட கட்டணங்களை மாணவ, மாணவியரே தமது சொந்தச் செலவில் செலுத்தவேண்டும்.

**சேருவதற்கான தகுதிகள்** **1997ம் ஆண்டு ஜூலை 1ம் தேதி அன்று**

| **வகுப்பு** | **கல்வித்தகுதி** | **வயது வரம்பு** |
|---|---|---|
| 8ம் வகுப்பு | 7ஆம் வகுப்பில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். | 15 வயதிற்கு மிகாமல் இருத்தல் வேண்டும். |
| 9ம் வகுப்பு | 8ஆம் வகுப்பில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும் | 16 வயதிற்கு மிகாமல் இருத்தல் வேண்டும். |
| 11ம் வகுப்பு | 10ஆம் வகுப்பில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். | 18 வயதிற்கு மிகாமல் இருத்தல் வேண்டும். |

**தேர்வு முறைகள்:**

**மாவட்ட அளவிலான தேர்வு**

மாணவ மாணவியருக்கு மாவட்ட அளவில் உடல்திறன் குறித்த தேர்வு ஒன்று நடைபெறும். மாவட்ட அளவிலான தேர்வு நடைபெறும் இடம், தேதி முதலானவை அந்தந்த மாவட்ட விளையாட்டு அலுவலரால் விண்ணப்பதாரருக்கு அஞ்சல் மூலம் தெரிவிக்கப்படும்.

**மாநில அளவிலான தேர்வு**

மாவட்ட அளவில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு மட்டுமே மாநில அளவில் தேர்வு நடைபெறும். அப்போது குறிப்பிட்ட விளையாட்டில் தகுதிகளின் கீழ் ஆய்வு செய்யப்படுவார்கள். மாநில அளவிலான தேர்வு நடைபெறும் இடம், தேதி முதலான விவரங்கள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், சென்னை84ல் இருந்து அஞ்சல் மூலம் தெரிவிக்கப்படும்.

விளையாட்டுப் பள்ளி/விளையாட்டு விடுதியில் பயிலும் மாணவ/மாணவியர் அவர்களுடைய விளையாட்டுத்திறனைப் படிப்படியாக வளர்த்துக்கொள்ள வாய்ப்புகள் அதிகமாக உள்ளன. அவ்வாறு திறனை வளர்த்துக்கொண்ட விளையாட்டுப் பள்ளி/விளையாட்டு விடுதி மாணவ மாணவியர் மாவட்ட, மாநில மற்றும் தேசிய போட்டிகளில் வெற்றி வாகை சூடியுள்ளார்கள்.

விளையாட்டுப் பள்ளி/விடுதியை விட்டுப் பல்கலைக்கழக மேற்படிப்பிற்காக வெளியே சென்ற மாணவ மாணவியர்களில் பலர் இந்திய அணிக்காகப் பன்னாட்டுப் போட்டிகளில் வெற்றி வாகையும் சூடியுள்ளார்கள்.

**வேலைவாய்ப்புகள்**

விளையாட்டு விடுதிகளில் பயின்ற மாணவ, மாணவியரில் பலர், வங்கி, தென்னக ரயில்வே,

வருமானவரித்துறை, தமிழ்நாடு மின்சார வாரியம், சுங்கவரி இலாக்கா, ஆயுள் இன்சூரன்ஸ் காப்பீட்டுக் கழகம், துறைமுகம், இந்தியக் கப்பற்படை இந்தியத் தரைப்படை முதலிய பல நிறுவனங்களில் விளையாட்டுத் திறனுக்காக வேலை வாய்ப்பினைப் பெற்றுப் பணிபுரிந்துவருகிறார்கள்.

**மாணவ/மாணவியர் சேர விண்ணப்பிக்கும் முறை**

தமிழ்நாட்டில் இயங்கும் விளையாட்டுப் பள்ளிகள்/விடுதிகள் சேர்க்கைக்கான விளம்பரம் தமிழ் செய்தித்தாளில், பொதுவாக, ஏப்ரல் இரண்டாம் வாரத்தில் வெளிவரும். விளம்பரம் வெளிவந்த பின்னர், விண்ணப்பப் படிவங்களை அந்தந்த மாவட்ட விளையாட்டு அலுவலரிடமிருந்து, விண்ணப்பப் படிவக் கட்டணத்தைச் செலுத்திப் பெற்று, விண்ணப்பப் படிவத்தை நிரப்பி, குறிப்பிட்ட கடைசி தினத்துக்குள் அந்தந்த மாவட்ட விளையாட்டு அலுவலர் அலுவலகத்தில் சேர்ப்பிக்கவேண்டும்.

மாவட்ட அளவிலான உடல்திறன் குறித்த தேர்வு (Physical Efficiency Test) அந்தந்த மாவட்டத் தலைநகரில் உத்தேசமாக மே மாதம் 10 முதல் 15க்குள் நடைபெறும். மாவட்ட அளவிலான தேர்வு செய்யும் (Skills of the Game & Game Situation) மே மாதம் கடைசி வாரத்தில், பொதுவாக 25 முதல் 28 தேதிகளில் நடைபெறும். விளையாட்டுப் பள்ளி/விடுதிகளில் தேர்வு செய்யப்படும் மாணவ/மாணவியர்க்கான தேர்வு முடிவுகள் ஜூன் முதல் வாரத்தில் அறிவிக்கப்படும்.

விளையாட்டுத் திறனை மேம்படுத்த விளையாட்டுப் பள்ளி/விடுதிகளில் சேருங்கள்! பயன்பெறுங்கள்!


கபடிப்போட்டி


கைப்பந்துப்போட்டி



சென்ற இதழ் தொடர்ச்சி

வணிக நிறுவனங்களின் பெயர்ப்பலகை

# தமிழுக்கு முதல் மரியாதை

193. Fibre-Glass Products .. நாரிழை - ஆடி உருவாக்க விளையகம், நாரிழை - ஆடி தயாரிப்புப் பொருள்கள்

194. Fibre Pipes .. நாரிழைக் குழாய்கள்

195. Filter .. வடிகலம்

196. Filter Cigarette .. வடிமுனை வெண்சுருட்டு

197. Finance .. நிதியகம், நிதி

198. Fire Engine .. தீயணைப்பு எந்திரம், தீயணைப்பு வண்டி

199. Fisheries .. மீனளம்

200. Fitter .. பொருத்துநர்

201. Flats .. அடுக்குமனை, அடுக்கு வீடுகள்

202. Flasks .. குடுவைகள், சேமச்செப்பு, சேமக் குடுவை

203. Florist .. பூ விற்போர், மலர் விற்பனையாளர்

204. Floodlight .. ஒளிவெள்ளம்

205. Flour Mill .. மாவாலை

206. Fluorescent Lamp .. பாதரச ஆவி விளக்கு

207. Fluorescence .. ஒளி வண்ணம், ஒளிர் வண்ணம்

208. Foam Pillow .. நுரையணை, நுரைத் தலையணை

209. Folding Furnitures .. மடக்கு அறைகலன்கள்

210. Footwears .. தாளணிகள், தாளணியகம், மிதியடியகம், காலணியகம்

211. Foundation .. நிறுவனம்

212. Foundry .. வார்ப்பகம், வார்ப்படச் சாலை

213. Frame Works .. படச்சட்டப் பணிமனை, படச்சட்டக் கடை

214. Framer .. படச் சட்டமிடுபவர்

215. Furniture Mart .. அறைகலன் அங்காடி, வீட்டு வசதிப் பொருள்கள்

216. Garments .. உடை வகைகள் (ஆடை)

217. Gas .. எரி ஆவி

218. Gas Welding .. ஆவிப் பற்றவைப்பு

219. General Stores .. பல்பொருள் அங்காடி

220. Gift House .. பரிசுப் பொருளகம் (இல்லம்)

221. Ginning Factory .. பஞ்சாலை, பஞ்சுப் பிரிப்பகம்

222. Godown .. கிடங்கு, கிட்டங்கி

223. Gold Refineries .. தங்கத் தூவடியாலை, தங்கத்தூய்மை ஆலை

224. Granites .. கருங்கற்கள், கிரானைட் கற்கள்

225. Graphics .. எழுத்து வரைகலை

226. Grille Works .. இரும்புக் கிராதிகள்

227. Grinder .. திரிகைக்கல், அரைப்பான், இயந்திர ஆட்டுக்கல்

228. Grindery .. சாணை பிடிக்கும் இடம்

229. Groceries .. பலசரக்கு

230. Group of Companies .. குழுமத் தொகுதி, வணிக நிறுவனத் தொகுதி

231. Guest House .. விருந்தகம், விருந்தில்லம், விருந்து மனை, விருந்தினர் மாளிகை / இல்லம்

232. Hair Dresser .. முடி திருத்துபவர்

233. Hair Stylist .. முடி ஒப்பனையாளர்

234. Hall .. மன்றம், கூடம், அரங்கம்

235. Handicrafts .. கைத்திறவினைகள், கைவினைப் பொருள்கள், கைத்திறவினையகம்

236. Handloom .. கைத்தறி

237. Hardwares .. வன்மாழைகள், வன்மாழையகம், வன்சரக்கு, இரும்புக் கடை

238. Hatchery .. குஞ்சுபொரிப்பகம்

239. Headlight .. முகப்பு விளக்கு

240. Health Centre .. நல மையம், நல்வாழ்வு நிலையம்

241. Hire .. வாடகை

For Hire .. வாடகைக்காக / வாடகைக்கு

242. Hi-tech Industries .. உயர் - தொழில்நுட்பத் தொழிலகம் (தொழில் நுட்பம்)

243. Holiday resort .. விடுமுறை ஓய்வகம்

244. Home .. அகம், இல்லம், வீடு

245. Home Appliance .. இல்லப் பயன்பொருள்கள், வீட்டுவசதிப் பொருள்

246. Hose-pipes .. நெளிவுக் குழாய்கள்

247. Hosiery .. உள்ளாடை

248. Hotel .. உணவகம்

249. House .. மனை, இல்லம்

250. Housing Developers .. வீட்டு வசதி மேம்பாடு, வீடுகட்டுவோர்

251. Ice-Creams .. பனிக்குழைவு, பனிப்பாலேடு

252. Industrial Corporation .. தொழிற் கூட்டிணையம், தொழில் கூட்டு நிறுவனம்

253. Industry .. தொழிலகம், தொழில்கள்

254. Initial .. முன்னெழுத்து

255. Institute .. நிறுவலகம், நிலையம், நிறுவனம்

256. Institution .. நிறுவனம்

257. Interact Club .. இடைவினை மன்றகம், இணைந்தியங்கு மன்றம், கலந்துரையாடு மன்றம்

258. Interest .. வட்டி

259. Investment .. முதலீடு

260. Invisible Darning .. தோன்றாத் தையலீடு

261. Iron Box .. சலவைப் பெட்டி, தேய்ப்புப் பெட்டி

262. Iron Works .. இரும்புச்சார் பணிகள், இரும்புத் தொழில்கள்

263. Jail .. சிறை

264. Jailer .. சிறை அலுவலர்

265. Jeweller .. நகை வணிகர்

266. Jewellery .. நகை வணிகம், நகை மாளிகை, அணிகல அங்காடி, அணிமணிப் பொற்சாலை

267. Job-Works .. அச்சுத் தனிப்பணிகள், சிறு அச்சுப்பணிகள்

268. Juices .. சாறுகள், பழச்சாறுகள்

269. Jubilee .. பெரு விழா, விழா

Silver Jubilee .. வெள்ளி விழா

Golden Jubilee .. பொன் விழா

Diamond Jubilee .. வைர விழா

Platinum Jubilee .. பவள விழா

270. Kiddies Corner .. குழந்தைகள் ஆடையகம்

271. Kinder Garten .. மழலையர் பள்ளி

272. Laboratory .. ஆய்வகம், ஆய்வுக்கூடம்

273. Lamination .. பளிச்சீடு, பளபளப்பு, ஒளிச்சுடர்

274. Laser Printing .. ஒளியச்சு

275. Laundry .. வெளுப்பகம், சலவையகம்

276. Lavatory .. கழிப்பறை

277. Litho Press .. கல்லச்சகம், பல்வண்ண அச்சகம்

278. Locker .. பெட்டகம்

279. Lodge .. தங்ககம், தங்குமனை, தங்கும் விடுதி

280. Lorry .. சரக்குந்து

281. Lorry Booking Office .. சரக்குந்துப் பதிவீட்டலுவலகம், சரக்குந்து முகவர், சரக்குந்துப் பதிவு அலுவலகம்

282. Lottery .. பரிசுச்சீட்டு

283. Lottery Centre .. பரிசகம், பரிசுச்சீட்டகம், பரிசுச் சீட்டு விற்பனை நிலையம்

284. Lubricant Oil .. மசகுப் பொருள், உராய்வு காப்புப் பொருள், மசகு எண்ணெய்

285. Lunch Home .. உணவகம்

286. Machine-Tools .. பொறி–வினைக் கருவிகள், இயந்திரக் கருவிகள்

287. Mahal .. மண்டபம்

288. Maintenance .. பேணுதல்

289. Makers .. உருவாக்குநர், தயாரிப்பாளர்

290. Mansion .. மாளிகை, தங்குமனை

291. Manufacturers .. உருவாக்கிகள், உற்பத்தியாளர்கள்

292. Manufacturing .. உருவாக்கம், தயாரித்தல்

293. Marbles .. சலவைக் கல்

294. Market .. சந்தை, அங்காடி

295. Marketing .. சந்தைப் பொருள் விற்பனை

296. Market Complex .. அங்காடி ஒன்றகம், அங்காடி வளாகம்

297. Mart .. அங்காடி, கடை

298. Meat Mart .. இறைச்சிக் கடை

299. Medicals .. மருந்தகம், மருந்துக் கடை, மருந்து விற்பனையகம்

300. Medical Union .. மருந்தக ஒன்றியம்

301. Mess .. உண்பகம்

302. Metal Mart .. உலோக அங்காடி, மாழை அங்காடி, உலோகக் கடை

303. Metal Works .. உலோகத் தொழில்கள், பொன்ம வேலைகள்

304. Metropolitan .. பெருநகர்

305. Milk Dairy .. பால்பண்ணை

306. Model .. மாதிரி

307. Modelling .. விளம்பரத் தோற்றம் காட்டல்

308. Modern .. புதுமை, நாகரிக, நவீன

309. Motorcycle .. விசையுந்து, மிதியுந்து

310. Mosaic .. பல்வண்ணக் கல், வன்ன வழவழப்புக் கல், பளபளப்புக் கல்

311. Moulding Works .. வார்ப்படப் பணியகம், வார்ப்படப் பணிகள்

312. Movies .. இயங்குபடங்கள், திரைப்படங்கள்

313. Musical Centre, Musicals .. இசையகம்

314. Mutton Stall .. கறிக்கடை, ஆட்டிறைச்சிக் கடை

315. Nail Polish .. உகிர்நெய், உகிரிப்பூச்சு, நகப்பூச்சு

316. Novelties .. புதுமைகள்

317. Nurse .. செவிலியர்

318. Nursery .. நாற்றங்கால், செடி வளர்ப்புப் பண்ணை, செடி வளர் பண்ணை

319. Nursery School .. மழலையர் பள்ளி

320. Nursing Home .. நலம் பேணகம்

321. Nutrition .. ஊட்டச்சத்து

322. Nylon .. நொசிவிழை

323. Offset .. எதிரீடு அச்சு / மறுதோன்றி

324. Oil Company .. எண்ணெய்க் குழுமம், எண்ணெய் நிறுவனம்

325. Oil Stores .. எண்ணெய்ப் பண்டகம், எண்ணெய்க் கடை

326. Omni Bus .. சொகுசுப் பேருந்து, ஒப்பந்தப் பேருந்து

327. Operation .. அறுவை மருத்துவம்

328. Ophthalmologist .. கண் மருத்துவர்

329. Opticals .. கண்ணாடியகம், மூக்குக் கண்ணாடியகம்

330. Optician .. கண்ணாடியாளர், மூக்குக் கண்ணாடி விற்பனையாளர்

331. Orchids .. பகட்டு மலரகம், வண்ணக் கொத்து மலரகம்



# சென்னையில் தென்னை

சிவ. சூரியன், இ.ஆ.ப.
கூடுதல் வேளாண்மை இயக்குநர் (ப.மே)

தென்னை ஒரு கற்பக விருட்சம். இதன் ஒவ்வொரு பாகமும் சுவைமிக்க நீராக, எண்ணெயாக, நாராக, எரிபொருளாக, தொழிற்சாலைகளுக்கு மூலப் பொருளாக, வீடுகட்ட, பானங்கள் தயாரிக்க மற்றும் பல பொருட்கள் தயாரிக்கவும் உதவுகின்றது. உலகில் தென்னை சாகுபடி பரப்பில், நம் இந்திய நாடு பிலிப்பைன்ஸ் மற்றும் இந்தோனேஷியா நாடுகளுக்கு அடுத்தபடியாக மூன்றாம் இடத்தை வகிக்கிறது. நமது இந்திய நாட்டில் சுமார் 1.2 மில்லியன் எக்டரில் தென்னை சாகுபடி செய்யப் படுகிறது. தமிழகத்தைப் பொறுத்த வரையில் ஒரு இலட்சத்து ஐம்பத்து மூன்றாயிரம் எக்டரில் தென்னை சாகுபடி செய்யப்படுகிறது. உற்பத்தித் திறனைப் பொறுத்த வரையில் மற்ற மாநிலங்களைவிட தமிழ்நாடு முதலிடத்தை வகிக்கிறது. தமிழகத்தின் ஒரு எக்டர் உற்பத்தித் திறன் 10,651 தேங்காய்கள் ஆகும். இந்த அதிக உற்பத்தித் திறனுக்கு முக்கியக் காரணம் நாம் தேர்வு செய்யும் இரகங்கள்தான்.

தென்னையின் இரகங்களைப் பொறுத்தவரை இரண்டே இரண்டு இரகங்கள்தான் உண்டு.

1. நெட்டை 2. குட்டை

**நெட்டை:**

இந்த இரகம் 80, 90 ஆண்டுகள் வரை பலன் கொடுக்கும். 15 முதல் 18 மீட்டர் உயரம் வரை வளரக் கூடியது. 6 மீட்டர் நீளமுடைய 25 முதல் 40 இலைகளுடன் மரம் உறுதியாக இருக்கும். வறட்சியும் தாங்கும். 6 முதல் 7 ஆண்டுகளில் காய்ப்பிற்கு வரும். ஆண்டிற்கு 80 முதல் 100 காய்கள் வரை காய்க்கக் கூடியது.

**குட்டை:**

குட்டையாக வளரும் தன்மை யுடைய இந்த இரகம் 4 மீட்டர் நீளமுடைய முட்டைகளுடன், மிக விரைவில் வளரக்கூடியது. 3 முதல் 4 ஆண்டுகளில் காய்ப்பிற்கு வரும். 25 ஆண்டுகள் வரை மட்டுமே காய்க்கும்.

**வீரிய ஒட்டுத் தென்னை:**

இவ்விரண்டு நெட்டை, குட்டை இரகங்களை இணைத்து உருவாக் கப்பட்டது வீரிய ஒட்டுத் தென்னை நெட்டை & குட்டை ரகமாகும்.

குட்டை, நெட்டை ரகங்களை இணைத்து உருவாக்கப்பட்டது வீரிய ஒட்டுத் தென்னை குட்டை & நெட்டை ரகமாகும்.

நெட்டை & குட்டை இரகம் 4 முதல் 5 ஆண்டுகளில் காய்ப்புக்கு வரும். ஆண்டிற்குச் சராசரியாக 200 முதல் 250 காய்கள் வரை காய்க்கும். ஒவ்வொரு காயிலும் 180 கிராம் அளவு கொப்பரை கிடைக்கும். இது 70% எண்ணெய் கொண்டது.

குட்டை & நெட்டை இரகம் 4 முதல் 5 ஆண்டுகளில் காய்ப்பிற்கு வரும். ஆண்டிற்கு சராசரியாக 250 காய்கள் வரை காய்க்கும். ஒவ்வொரு காயிலும் சுமார் 200 கிராம் கொப்பரை கிடைக்கும். இந்த இரகமும் 70%எண்ணெய் கொண்டது.

**உங்கள் தென்னையிலும் ஆண்டிற்கு 200 முதல் 250 காய்கள் வரை பெற வேண்டுமா?**

**உங்கள் தென்னையில் ஏதாவது பூச்சி, நோய்ப் பிரச்சினையா?**

**உங்கள் வீட்டுத் தோட்டத்தில் வீரிய ஒட்டுத் தென்னை நட வேண்டுமா?**

**இவை அனைத்திற்கும் நீங்கள் அணுக வேண்டிய இடம்:**

**சென்னை மாநகர தென்னை புனரமைப்புத் திட்டம்!**

ஆம். இத்திட்டம் தமிழ்நாடு அரசு வேளாண்மைத்துறையின் கீழ் சென்னை நகரில் கடந்த 14 ஆண்டுகளாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதில் ஒரு வேளாண்மை உதவி இயக்குநர் கட்டுப்பாட்டில் 4 வேளாண்மை அலுவலர்கள் நகரின் ஒவ்வொரு முக்கிய மையங்களைத் தலைமை இடமாகக் கொண்டு செயல்படுகின்றனர். இவர்களுடன் 18 களப்பணியாளர்களும் உள்ளனர்.

1991ஆம் ஆண்டின் கணக்கெடுப்புப்படி சென்னை மாநகரில் ஆறு இலட்சத்து இருபதாயிரம் தனி வீடுகள் உள்ளன. (அடுக்குமாடிக் கட்டடங்கள் நீங்கலாக) ஒரு வீட்டிற்குச் சராசரியாக இரண்டு மரங்கள் என்று கணக்கெடுத்தாலும், சென்னை மாநகரில் சுமார் 12,40,000 மரங்கள் உள்ளன. இதுவரை இத்திட்டத்தில் 13 இலட்சம் தென்னங்கன்றுகள் விநியோகிக்கப்பட்டுள்ளது. மேலும் சுமார் 6 இலட்சம் தென்னை மரங்களுக்கு உரமும், 3 இலட்சம் மரங்களுக்குப் பூச்சி, நோய் தாக்குதலுக்கான பயிர்ப் பாதுகாப்பும் செய்யப்பட்டுள்ளது. மகசூலும் கணிசமான அளவு உயர்ந்துள்ளது!

இத்திட்டத்திற்கு வீரிய ஒட்டுத் தென்னங்கன்றுகள் விநியோகிக்க மாதவரம் பால் பண்ணைக்கு அருகில் அரசு தென்னை நாற்றுப் பண்ணை செயல்பட்டு வருகிறது. இங்கு தமிழகத்தின் பல்வேறு ஒட்டுச் சேர்க்கை நிலையங்களிலிருந்து பெறப்பட்ட வீரிய ஒட்டு விதை நெற்றுக்கள் முறைப்படி நடப்பட்டு கன்றுகளாக்கி விநியோகம் செய்யப்படுகிறது. ஒரு கன்றின் விலை ரூ.15/ ஆகும். இந்தப் பண்ணையிலிருந்து உற்பத்தி செய்யப்படும் வீரிய ஒட்டுத் தென்னங்கன்றுகள் சென்னை மாநகரத்திலும், செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டத்திலும் உள்ள வேளாண் பெருமக்களுக்காக விநியோகம் செய்யப்படுகிறது.

மாநகர தென்னை புனரமைப்புத் திட்டத்தில் வீடுகள் தோறும் தொடர்பு கொள்ளுதல், தென்னைக்கு உரமிடல் மற்றும் பயிர்ப் பாதுகாப்பு, தென்னங்கன்றுகள் விநியோகம் ஆகிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. சென்னை மாநகரில் வீடுகள்தோறும் தொடர்பு கொள்ள களப்பணியாளர்கள் உரிய பதிவேட்டுடன் தங்கள் பகுதிக்கு வருகை புரிவார்கள். வீட்டில் ஏற்கெனவே உள்ள தென்னங்கன்றுகள் பற்றிய விவரங்கள், என்ன இரகம், பயிர்ப் பாதுகாப்பு மற்றும் உரமிடும் பணி செய்யப்பட்டதா? போன்ற விவரங்களைச் சேகரித்துக் குறித்துக் கொள்வார்கள். இதுமட்டுமல்லாது வைத்திருக்கும் தென்னைக்கும் மேலாக இன்னும் கன்றுகள் நட வாய்ப்பு உள்ளதா என்பதையும் அறிந்து அதைப் பரிந்துரை செய்வார்கள். கன்றுகள் நடுவதாக இருந்தால் அதனை நட்டுப் பராமரிக்கும் முறையையும் கூறி வருகின்றனர். தேவையறிந்து கன்றுகளையும் தருவார்கள்.

எனவே சென்னை மாநகரம் வாழ் மக்கள் அனைவரும் களப் பணியாளர்கள் சர்வே பணிக்கு வரும்பொழுது அவர்களுக்கு முழு ஒத்துழைப்பு அளித்து தங்கள் வீட்டில் வைத்திருக்கும் தென்னைக்குத் தக்க ஆலோசனைகள் பெற்று பலன் பெறக் கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.



மேலும் ஏற்கெனவே, வைத்திருக்கும் தென்னைக்குப் பூச்சி, நோய்த் தாக்குதல் தென்பட்டுப் பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கை செய்ய வேண்டும் என்று விரும்பினாலோ, அல்லது குரும்பைகள் கொட்டி விடுவது, உரமிடுவது போன்ற ஆலோசனைகளுக்கு 456563 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு தங்கள் பிரச்சினைகளைக் கூறினால், உடன் களப்பணியாளர்கள் உங்கள் இல்லத்திற்கு வந்து இலவச ஆலோசனைகள் வழங்குவார்கள்.

தாங்கள் தொலைபேசியில் தொடர்பு கொண்டு தங்கள் விலாசத்தைக் கூறினால், அந்த விலாசங்கள் முகவரிப் பதிவேடு என்று அலுவலகத்தில் பராமரிக்கப்படும் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டு அப்பகுதி வேளாண்மை அலுவலர்/ வேளாண்மை உதவி அலுவலரிடம் ஒப்படைக்கப்படும். விலாசம் கிடைத்த ஓரிரு தினத்திற்குள் மூதுரிமை அடிப்படையில் களப் பணியாளர்கள் உங்கள் வீட்டிற்கு வருவார்கள். உங்கள் தேவையைக் கேட்டறிந்து கன்றுகள் தருவதோ, வீட்டில் உள்ள தென்னைக்கு உரமிடப்பரிந்துரையோ அல்லது பயிர்ப் பாதுகாப்புப் பரிந்துரையோ செய்வார்கள். இது தவிர ஆடி மாதங்களில் ஒவ்வொரு களப் பணியாளர்களும் தங்கள் பகுதியில் ஒரு ஆடிப்பட்ட முனைப்பு இயக்கங்கள் ஏற்பாடு செய்து அவ் விழாவில் குறைந்தது 100 பேரை பங்கேற்க வைத்து, தென்னை சாகுபடி பற்றிய விவரங்களைக் கூறுவதுடன் செயல் விளக்கமாகவும் செய்து காட்டி வருகின்றனர்.

சென்னை மாநகர மக்களுக்கோர் வரப்பிரசாதமாக உள்ள இது மாநகர தென்னை அபிவிருத்தித் திட்டம், 456563 என்ற தொலைபேசியில் செயல்படுகிறது. சென்னை மாநகர மக்கள், தொடர்பு கொண்டு பயன் பெறலாம்.

மேற்படி அனைத்துப் பணிகளையும் செய்ய நீங்கள் அணுக வேண்டிய முகவரி:

**வேளாண்மை உதவி இயக்குநர்**
**மாநகரத் தென்னை அபிவிருத்தித் திட்டம்,**
**ஓல்டு டவர் பிளாக்,**
**நந்தனம், சென்னை-35**

**தொலைபேசி எண்: 456563**

# மன்றமா, மண்டபமா?

**வா**தம் எதிர்வாதத்தோடு நடைபெறுகின்ற சொற்போர் பாட்டாக இருக்குமானால் லாவணிக் கச்சேரி என்கிறோம். அதுவே சொற்பொழிவாக இருக்குமானால்– பட்டி மன்றம், அல்லது பட்டிமண்டபம் என்கிறோம்.

பட்டிமன்றமா, பட்டிமண்டபமா – எது சரி?

கலைக் களஞ்சியத்தில் பார்த்தோமானால், ‘பட்டி’ என்ற சொல்லுக்கு... சிற்றூர், கிடை, துண்டுச் சீட்டு, அட்டவணை, Hall for the Meeting of Scholars என்றெல்லாம் ஏதேதோ பொருள் தரப்பட்டிருக்கிறது.

தொல்காப்பியம் செய்யுள் அதிகாரத்தில்– ‘பட்டிமண்டபம்’ என்ற சொல்லே காணப் படுகிறது.

சங்கம் வைத்துத் தமிழ் வளர்க்கப்பட்ட காலத்தில், புலவர் பெருமக்கள் கூடியிருந்து தமிழாராய்ச்சி செய்வதற்காகப் பாண்டிய மன்னனால் கட்டப்பட்ட மண்டபமே பட்டி மண்டபம் என்கிறது வரலாறு.

‘பட்டி மண்டபத்துப் பாங்கறிந் தேறுமின்’ என்ற பாடலடிகள் மணிமேகலையில் காணப் படுகின்றன.

‘பகைபுறத்துக் கொடுத்த பட்டிமண்டபமும்’... என்று சிலப்பதிகாரத்தில் சொல்லப்படுகிறது.

‘பட்டி மண்டப மேற்றினை ஏற்றினை’ என்று திருவருட்பா தெரிவிக்கிறது.

‘பன்னலங் கலைதெரி பட்டி மண்டபம்’ என்கிறது இராமாயணம்.

தேவாரத்திலோ– ‘பட்டிமன் றன்ன...! என்ற சொற்கள் காணப்படுகின்றன.

‘வரம்பு கடந்து நடக்கும் இருபாலரைக் குறிக்கும் சொல்லாகி விட்டது இது’ என்று தமிழ்த் தாத்தா உ.வே.சா. கூறியிருக்கிறார்.

‘இந்திரன்’

# அறிவியல் துளிகள்

மலேசியக்காடுகளில் ஹார்ன்பில்ஸ் எனும் பெரிய பறவைகள் வசிக்கின்றன. பெண் பறவைகள் முட்டையிட்டு அடை காக்கும் போது வெளியில் சென்று உணவு தேட முடியாது. அதனால், அதன் ஆண் பறவைகள் அலைந்து திரிந்து பழங்கள், இலைகள் போன்றவற்றைச் சேகரித்து அவற்றைத் தன்னுடைய வயிற்றிலுள்ள ஓர் மெல்லிய சவ்வை எடுத்து மூட்டையாகக் கட்டிக் கொண்டு வருகிறது. பெண் பறவைகள் அதை மகிழ்ச்சியாக உண்டு, முட்டைகளை அடைகாத்துக் குஞ்சு பொரிக்கும். தினந் தோறும் அதன் வயிற்றிலிருந்து மெல்லிய சவ்வை எடுத்துவிடுவதால் ஆண்பறவைகள் நாளடைவில் மிகவும் இளைத்துவிடும். சமயங்களில் தன் மனைவிக்காக உயிரையே விட்டும் விடுகிற அபாயமும் இருக்கிறது.





நியூசிலாந்து நாட்டில் உள்ள கிவி பறவைகள், உருவில் நமது நாட்டுக்கோழிகள் அளவுக்குத்தான் இருக்கின்றன. ஆனால் அவை இடும் முட்டையின் அளவு சாதாரணக் கோழிமுட்டையை விட எட்டுமடங்குப் பெரிதாக இருக்கும்.

உலகில் அதிவிரைவாக வளரும் தாவரம் பிரேசில் நாட்டிலுள்ள ஒரு வகைக் காளான்கள். இவை பிரேசில் காளான் என்றே அழைக்கப்படுகின்றன. இதன் விதைகள் நிலத்தில் விழுந்தவுடன் நிமிடத்திற்கு 5 மி.மீ. அளவுக்கு வளரத் தொடங்கும். 20 நிமிடத்திற்கு முழு உருவத்தையும் அடைந்து விடும். ஏராளமான தண்ணீரை உறிஞ்சிப் பருகுவது தான் இதன் காரணம்.



இரண்டு கைகள் ஒரே மாதிரி இருப்பதில்லை என்று கைரேகை ஜோதிடரிலிருந்து, ஃபாரன்சிக் நிபுணர்கள் வரை சொல்கிறார்கள். அதேபோல், ஒரே தாவரத்தில் உள்ள இரண்டு இலைகளும் ஒன்றுபோல இருப்பதில்லை. அவைகளிலும் சிறு சிறு வேறுபாடுகள் உண்டு.

வேண்டியவர்களுக்கு ஒன்றும், வேண்டாத வர்களுக்கு மற்றொன்றும் செய்வது மனிதர்கள் மட்டுமல்ல. தாவரங்கள் கூட இந்த வேலை யைச் செய்கின்றன. ஒரு தாவரம் தன்னுடைய பக்கத்தில் தனக்கு வேண்டிய தாவரங்கள் மட்டும் வளர ஒருவித வேதியியல் பொருளைத் தூவி அனுமதிக்கும். பிடிக்காதவைகளை அதுபோல் வேறொரு வேதியியல் பொருளைப் பரப்பி வளரவிடாமல் செய்து விடும். இந்த உயிரியல் செயல்பாடுகளுக்கு விஞ்ஞானிகள் அல்லெலோபதி என்று பெயர் வைத் துள்ளனர்.





வேப்பமரப்பட்டைகளும், அதன் இலைகளும் மருந்தாகப் பயன்படுவதை நாம் அறிவோம். ஆனால், அவைகள் குடும்பக் கட்டுப்பாடு சாதனங்களாகவும் பயன் படுகின்றன என்று விஞ்ஞானிகள் ஆராய்ந்து சொல்லியுள்ளார்கள்.

எட்டுக்கால் பூச்சி (Spiders)களின் கால் அமைப்பை அடிப்படையாகக் கொண்டு 'ரோபாட்ஸ்' தயாரிக்கப்படுகிறது. எட்டுக் கால் அசைவுகளைக் கொண்டு எந்தவிதமான தரையிலும், திசையிலும் இதனால் நகர முடியுமாம்.





பெரும்பாலும் எட்டுக்கால் பூச்சிகளைப் பறவைகள் பிடித்து உணவாக உண்ணும். ஆனால் தென் அமெரிக்காவில் உள்ள ஒரு எட்டுக்கால் பூச்சி இனம் மட்டும் சிறுசிறு பறவைகளைப் பிடித்து உணவாக உட்கொள் கிறதாம். அந்தப் பூச்சிகளின் கால்கள் 3 முதல் 8 அங்குலம் நீளம் வரை பரவி நீண்டு உறுதியாக இருக்கின்றன. தங்கள் வலையில் மாட்டிக் கொண்ட பறவை, சிறு விலங்கு களைக் கடித்துத் தின்ன முடிய வில்லை என்றால் அப்படியே வைத்து அதன் இரத்தத்தை உறிஞ்சிக் கொண்டு மற்றவற்றை விட்டுவிடுகிறதாம்.

நாம் பொதுவாக இனிப்பு, கரிப்பு, உப்பு, புளிப்பு சுவைகளைச் சுவைத்து உணர்கிறோம். இவைகளை உணர நம் நாக்கில் 3000 உணர்வு மொட்டுகள் இருக்கின்றன. நம்மைவிட விலங்குகளுக்கு இவை அதிகம். பாருங்கள்- பன்றிக்கு 5,500 மொட்டுகள், பசுவுக்கு 3,500 மொட்டுகள், மானுக்கு 50,000 மொட்டுகள்.



ஒரு கிலோ தேனைச் சேகரிக்க ஒரு தேனீ 50 இலட்சம் மலர்களைத் தேடி ஓட வேண்டியிருக்கிறது. இதற்காக அது சுமார் 1 இலட்சம் கிலோமீட்டர் தூரம் பறக்க வேண்டியிருக் கிறது. இப்படி அரும்பாடுபட்டு சம்பாதித்த தேனைத்தான் மனிதன் அவைகளை விரட்டிவிட்டு இலகுவாகக் கொண்டுவந்து விடுகிறான்.





இடத்துக்கு இடம், மனிதனுக்கு மனிதன், நேரத்துக்கு ஒரு பேச்சுப் பேசுபவர்களை அவர்கள் தங்கள் நிறத்தை அடிக்கடி மாற்றிக் கொள்கிறார்கள் என்பதால் பச்சோந்தி என்று அழைக்கிறோம். ஆனால் பச்சோந் திகள் தங்கள் சுற்றுப்புறத்தை ஒட்டி நிறம் மாறுவதில்லை. பச்சோந்திகளின் உடம்புக்குப் பின் அடிப்பாகத்தில் உள்ள மெல்லிய தோல் ஒளி ஊடுருவக்கூடியது. அதில் மஞ்சள், கருப்பு, சிவப்பு நிறமிச் செல்கள் நிறைந் துள்ளன. இந்த நிறமிச் செல்களை நீட்டி குறுக்குவதால் அதன் விளைவாகப் பல நிறங்கள் உருவாகின்றன. இது பச்சோந்தி களின் மனநிலையைப் பொறுத்து மாறுபடு கின்றன. கருமையாகவும், பய உணர்ச்சியின் போது வெளுமையுடன் மஞ்சள் புள்ளிகளும், கடுமையான வெயில் சூட்டின்போது பச்சை நிறத்தையும் கொண்டு மாறுகின்றன.

மனித உயிரின் எடை எவ்வளவு தெரியுமா? வெறும் 21 கிராம்தான். மனிதன் உயிர் பிரிவிற்கு முன்னும், பிரிந்த பின்னும் உடலை எடை போட்டுப் பார்த்த விஞ்ஞானிகள் இந்த அறிவிப்பை வெளியிட்டிருக்கிறார்கள்.





மனித உடம்பில் உள்ள பாஸ்பரசை எல்லாம் திரட்டினால் 2000 தீக்குச்சிகள் தயாரிக்கலாம். கொழுப்பை எடுத்தால் 7 பார் சோப்புகள் தயாரிக்க முடியும். இரும்புச் சத்தைப் பிழிந்தால் ஒரு ஆணி செய்து விடலாம்.

ஆண்களைவிட பெண்களுக்குத்தான் கொழுப்பு அதிகம். ஆண்கள் உடம்பில் 15 சதவிகிதமும், பெண்கள் உடம்பில் 28 சதவிகிதமும் கொழுப்பு நிறைந்திருப்பதாக விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள்.



# அரசு உதவிகளைப் பெற யாரை அணுக வேண்டும்?

## மறுவாழ்வுத்துறை

| திட்டத்தின் பெயர் | தகுதிகள் - நிபந்தனைகள் | அணுகவேண்டிய அலுவலர் |
|---|---|---|
| உடல் ஊனமுற்றோர் சுயவேலைவாய்ப்புத் திட்டம் | ஊனத்தின் தன்மை 40 சதவீதத்திற்கு மேல் இருக்க வேண்டும். 18 வயதுக்கு மேல் இருக்க வேண்டும். கடன்தொகை ரூ.7000 வரை மானியம் 1/3 பங்கு அதிகபட்சம் ரூ.1000. | சம்பந்தப்பட்ட மாவட்ட மறுவாழ்வு அலுவலர் |
| மூன்று சக்கர வண்டி | 12 வயதுக்கு மேலுள்ளவர்கள் இருகால்களும் இயங்காதவர்கள். | " " |
| மூன்று சக்கர வண்டி (சிறியது) | 12 வயதுக்குட்பட்டவர்களுக்கு அளிக்கப்படுகிறது. இரண்டு கால்களும் இயங்காதவர்கள். வருட வருமானம் 30,000க்குக் குறைவாக இருத்தல் வேண்டும். ஊனத்தின் தன்மையும் 60 சதவீதம் ஆக இருக்க வேண்டும். | ,, ,, |
| உடல் ஊனமுற்றோர்களுக்கு உபகார சம்பளம் 1 முதல் 8ம் வகுப்பு வரை | உடல் ஊனமுற்றவர்களாக இருக்க வேண்டும். மாணவர்கள் தொடர்ச்சியாக தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.12,000க்கு மிகாமல் இருக்க வேண்டும். ரூ.25 முதல் ரூ.100 வரை உதவித்தொகை அளிக்கப்படுகிறது. | " " |
| ஒன்பதாம் வகுப்பும் அதற்கு மேல் பயிலும் மாணவர்களுக்கு மாதம் • ரூ. 85 - 100 உதவித்தொகை | ஆண்டு வருமானம் ரூ.24,000க்குக் குறைவாக. | " " |
| விழி இழந்தோர்களை மணக்கும் ஆண், பெண்களுக்கு அளிக்கப்படும் ஊக்கத்தொகை | மணமகனோ, மணமகளோ முற்றும் கண் தெரியாமல் இருக்க வேண்டும். புதிய திருமணமாக இருக்க வேண்டும். அரசின் இதர சலுகைகளைப் பெறாதவராக இருக்க வேண்டும். ஆண்டு வருமானம் ரூ.1200க்குக் குறைவாக இருக்க வேண்டும். அரசின் ஊக்கத்தொகை ரூ.10,000த்தில் 7,000க்கு தேசிய சேமிப்புப் பத்திரமாகவும், ரூ.3,000 ரொக்கமும் வழங்கப்படும். | " " |

| | | |
|---|---|---|
| பார்வையற்றோர்களுக்கு ஊன்றுகோல் மற்றும் கருப்பு மூக்குக் கண்ணாடி வழங்கும் திட்டம் | முற்றிலும் பார்வையற்றவர்களுக்கு ஊன்றுகோல் மற்றும் கருப்பு மூக்குக் கண்ணாடி வழங்கப்படும். இதன் மதிப்பு ரூ.150. | மாவட்ட மறுவாழ்வு அலுவலர் |
| காதொலிக் கருவி வழங்கும் திட்டம் | ஊனத்தின் தன்மையைப் பொறுத்து காது கேட்கும் கருவி இலவசமாக வழங்கப்படும். ஆண்டு வருமானம் ரூ.12,000க்குத் இருக்க வேண்டும். இதன் மதிப்பு ரூ.1,000. | " " |
| உடல் ஊனமுற்றவர்களுக்கு பெட்ரோல் மானியம் | உடல் ஊனமுற்றோர்களுக்கு இச் சலுகை அளிக்கப்படுகிறது. மாத வருமானம் ரூ.2,500க்கு மிகாமல் இருக்க வேண்டும். இவர்கள் பணிபுரியும் துறையிலிருந்து எந்த போக்குவரத்துப் படியோ, உதவியோ பெற்றிருத்தல் கூடாது. 2 குதிரை திறனுக்கு மிகாமல் உள்ள வாகனத்திற்கு மாதம் 15 லிட்டர் பெட்ரோல் விலையில் 50 சதவிகித மானியம் அளிக்கப்படுகிறது. 2.5 குதிரைத்திறனுக்கு அதிகமாகவுள்ள வாகனத்திற்கு மாதம் ஒன்றுக்கு 25 லிட்டர் பெட்ரோல் விலைக்கு 50 சதவீத மானியம் அளிக்கப்படும். | " " |
| ஆப்ரேஷன் போலியோ திட்டம் | இளம்பிள்ளை வாதத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அறுவைச் சிகிச்சை மூலம் சரிசெய்தல், ஊன்றுகோல் வழங்குதல், முடநீக்குக் கருவிகள் வழங்குதல், தசை பயிற்சி அளித்தல், வங்கிக் கடனுதவி, பள்ளிச் சேர்க்கை, கல்வி உதவித் தொகை வழங்குதல், மூன்று சக்கர வண்டி, சக்கர நாற்காலி வழங்குதல் போன்ற மறுவாழ்வு உதவிகள் வழங்கப்படுகின்றன. | " " |
| உடல் ஊனமுற்றவர்களுக்கு 100 கி.மீ. வரை செல்ல இலவச பேருந்துச் சலுகை | ஊனமுற்றவர்கள் அனைவருக்கும் வேலைபயிற்சி கல்வி மற்றும் மருத்துவ சிகிச்சை பெற இச்சலுகை அளிக்கப்படுகிறது. மூளை வளர்ச்சி இல்லாத நபர்களுக்கு உடன் செல்லும் ஒரு நபருக்கும் சேர்த்து இலவச பயணச் சலுகை வழங்கப்படும். உடல் ஊனமுற்றோருக்கு மாதத்தில் 46 தடவைகள் செல்ல இயலும். | " " |

| | | |
|---|---|---|
| அடையாள அட்டை வழங்குதல் | ஊனத்தின் தன்மை 40 சதவீதமாக இருக்க வேண்டும். மருத்துவச் சான்று, இருப்பிடச் சான்று, புகைப்படத்தின் நகலுடன் விண்ணப்பிக்க வேண்டும். | மாவட்ட மறுவாழ்வு அலுவலர்கள் |
| உடல் ஊனத்திற்கு பராமரிப்புத் தொகை வழங்குதல் | முற்றிலும் உடல் ஊனமுற்றவர்களாக இருக்க வேண்டும். ஊனத்தின் தன்மை 75 சதவீதத்திற்கு மேல் இருக்க வேண்டும். ஆண்டு வருமானம் ரூ.12,000க்குக் குறைவாக இருக்க வேண்டும். அரசின் இதர சலுகைகளைப் பெறாதவராக இருக்க வேண்டும். மாதம் ரூ.100 வீதம் 10 ஆண்டுகளுக்கு அல்லது ஆயுட்காலம் வரை இதில் எது குறைவோ அக்காலம் வரை அளிக்கப்படும். | ” ” |
| அரசு காது கேளாதோர் பள்ளி | 5 வயது முதல் 10 வயது குழந்தைகள். தங்குமிடம் மற்றும் உணவு இலவசம். நர்சரி பள்ளிக்கும் மாணவர்கள் அனுமதிக்கப்படுகின்றனர். | |



## சட்டச் சொற்கள் குறைவா?

“பொதுவாக, ‘சட்டம்’ என்று சொல்கின்ற நேரத்தில் சட்டத் துறையிலே தமிழ்மொழி போதிய அளவு வளரவில்லை என்று எனக்கு ஒருகுறை உண்டு. நம்முடைய தமிழில் சட்டத்திற்கான சொற்றொடர்கள் மிகமிகக் குறைவு. ஆங்கிலத்திலே இருப்பதைப் போன்ற தனிச் சொற்றொடர்கள் தமிழிலே இல்லை என்கின்ற குறைபாடு எனக்கு உண்டு.

சட்டமன்றம் என்று தமிழிலே சொல்கிறோம். ஆனால் ஆங்கிலத்தில் ‘Law Council’, (லா கவுன்சில்) என்று சொல்லவில்லை. ‘Legislative Assembly’ (லெஜிஸ்லேடிவ் அசெம்பிளி) என்று தனிச்சொல் இருக்கிறது. தமிழில் சட்டம் என்ற அதே சொல்லைத்தான் அங்கேயும் பயன்படுத்துகிறோம். அந்த மன்றத்தில் சட்டங்களை இயற்றுகிறோம். அந்தச் சட்டம் சட்டமாவதற்கு முன்பு ஆங்கிலத்திலே ‘‘Bill’’ (பில்) ஆக இருக்கிறது. தமிழில் தனிச் சொல் இல்லை. தமிழில் “சட்டமுன் வடிவு” என்று சட்டத்துடன் “முன் வடிவை” இணைத்து, சட்டமுன் வடிவு என்று தான் சொல்கிறோம். வேறு தனிச் சொல் தமிழிலே அதற்கு இல்லை.

தமிழிலே, இந்தச் சட்டத் துறையிலே இருக்கின்ற சொற்கள் மிகமிகக் குறைவு. இன்னும் அதிகச் சொற்களைத் தனித்தனிச் சொற்களை, சட்டத்துறையிலே ஆக்க வேண்டிய கடமை சட்ட வல்லுநர்களுக்கு, சட்டத்துறையிலே இருப்பவர்களுக்கு, நீதியரசர் உட்பட அனைவருக்கும் அந்தப் பொறுப்பு இருக்கிறது- கடமை இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்”.

**-உலகத் திருக்குறள் மையம் நடத்திய முதல் திருக்குறள் சட்டவியல் மாநாட்டில் மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் (4.1.1997).**

வாசகர் இதயம்

# அற்புதம் போங்கள்!

அரசியல் மேதைகளின் பொன்மொழிகள், செய்திச்சரம், கவிதை, கதை, வேலைவாய்ப்புச் செய்திகள் எல்லாம் தாங்கி தனிச் சிறப்புடன் வெளிவருகிறது தமிழரசு; ஆசிரியர் குழுவினர்க்குப் பாராட்டுகள்.

-டி. செல்வம்,
டி. சிங்காரவேல்,
எஸ். திவ்யா - கரும்பியூர்

அரசு உதவி பெற யாரை அணுக வேண்டும் என்ற தகவல்களும், அரசு ஆணை களும் பயனுள்ளவையாக இருக் கின்றன; அரசு ஆணைகளைத் தமிழிலும் வெளியிடுவது நல்லது.

-அ. கந்தசுவாமி,
க. பத்மாவதி
திருப்பூர் - 4

அறிவியல் துளிகள் பகுதி அற்புதம் போங்கள்!

-க. பழனி முருகன்,
தேவர்கண்டநல்லூர்

'பொன்மலர் நாற்றம் பெற்றாங்கு' தலைசிறந்து விளங்கு கிறது தமிழரசு. தொடர்க இத்தொண்டு.

-புலவர் பெ. இராஜசுந்தரம்,
சென்னை - 11

மழைக்கால நோய்கள் பற்றிய மருத்துவக் கட்டுரை 'காலத்தால் செய்த நன்றி'.

-சோலைப்பிரியன்
திருப்பத்தூர்

'கலைஞரின் நெஞ்சுக்கு நீதி' முக்கியப் பகுதிகளை அவ்வப் போது வெளியிட்டால், மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

-எம். ஏகாம்பரம்
பாகலா, சித்தூர்

தற்போது வரும் தமிழரசு, படிக்கப்பட வேண்டியதாக மட்டு மல்ல; பாதுகாக்கப்படவேண்டிய ஆவணமாகவும் இருக்கிறது. பாராட்டுக்கள்.

-கே. கனகசபை,
வேதாரண்யம்.

ஆசிரியரும் வெளியிடுபவரும்: என்.எஸ். பழனியப்பன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம், தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது
துணை இயக்குநர்: ஆர். அண்ணாதுரை, உதவி இயக்குநர்: எம்.அண்ணாமலை
ஆசிரியர் குழு: கேடி. புகழேந்தி, ஜி. லோகநாதன், எம்.விஎம். அசோகன், அமதிமாறன்,
பிஎல். ராஜேந்திரன், ஜியாஸ்கரன், எஸ். ஜெயலலிதா
ஓவியர்கள்: என். குமாரசாமி, சி. ஜெயச்சந்திரன், பி. குமார், தி. சம்பத், தி. மகேஸ்வரி
முகவரி: தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை - 600 002. தொலைபேசி எண்: 568926, 568927

# ஆசிரியர் மடல்

இந்திய நாடு சுதந்திரம் அடைந்திடு முன்பே, அதாவது 1938லேயே நம் தமிழ்நாட்டில் இந்தி மொழி ஆதிக்கம் பற்றி முண்டுவிட்ட அச்சம், இன்னமும் இலைமறை காயாகவே இருக்கிறது எனலாம்.

கயல், வில், புலி பொறித்த கொடியேந்தி- அன்றைய தினம் மாணவப் பருவத்தினராயிருந்த முதல்வர் கலைஞர் அவர்கள் ஆரூர் வீதிகளிலே இளைஞர்கள் பலரோடும் இந்தியை எதிர்த்து எழுச்சி முழக்கம் செய்தார். தந்தை பெரியார், அறிஞர் அண்ணா முதலானோர், மொழிப்போரில் ஈடுபட்டுச் சிறை புகுந்தனர். அதன் பிறகு 1948, 1952, 1965, 1983 என்று அன்னைத் தமிழ் காக்கும்- இந்தி ஆதிக்கத்தை எதிர்க்கும் மொழிப்போர் தமிழகமெங்கும் தொடர்ந்தது. அதன் விளைவு?...

ஏராளமானோர் இரத்தம் சிந்தினர்; எண்ணற்றோர் சிறை புகுந்தனர்; 'வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்' என முழங்கி ஏறத்தாழ ஐம்பது இளஞ்சிங்கங்கள் துப்பாக்கிக் குண்டேந்தியும், தீக்குளித்தும் இன்னுயிர் ஈந்தனர்! குறிப்பாக 1965 ஜனவரி 25ஆம் நாள், 'இந்தியே நாட்டின் ஆட்சிமொழி, என்கிற 17வது அரசியல் சட்டப் பிரிவைத் தீயிட்டு, அன்று மூண்ட மொழிப் போரில் தம்முயிரைத் தியாகம் செய்தோர், உலக ஏடுகளாலெல்லாம் வியந்தெழுதப் பட்டு வரலாற்றுச் சிறப்படைந்தார்கள். 1967ல் ஆட்சிப் பொறுப்பேற்ற தமிழ் நாட்டரசு இந்தித் திணிப்பிற்கு இடமின்றிப் பண்டித நேருவின் வாக்குறுதியை நிறை வேற்றிடும் வகையில், இருமொழிக் கொள்கையை அறிவித்தது.

அண்ணாவை அடுத்து முதல்வரான கலைஞர் அவர்கள், மொழிப் போர்த் தியாகிகளுக்கு அரசு நிதி வழங்கும் என்று அறிவித்தார். இப்போது தமிழ் வளர்ச்சிக்கெனத் தனியே ஓர் அமைச்சரே நியமிக்கப்பட்டிருக்கிறார்.

மொழிப் போர் நடந்த நாட்களில் மறக்க முடியாததாகத் திகழ்ந்திடும் 1996 ஜனவரி 25ஆம் நாள், ஆண்டுதோறும் வீரவணக்க நாளாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. 'வெங்கொடுமைச் சாக்காட்டில் விளையாடும் தோள் எங்கள் வெற்றித் தோள்கள்' என்கிற புரட்சிக் கவிஞரின் வைர வரிகளுக்கு எடுத்துக்காட்டான அந்த வீர மறவர்களுக்குத் "தமிழரசு"ம் தமது வீர வணக்கத்தைச் செலுத்துகிறது.

பத்மவாசன்



தூய
பட்டு

தூய
சரிகை



ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ–ஆப்டெக்ஸ்.

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ் நாடு கைத்தறி

தமிழரசு
பதிவு எண். M. 8676
Licence No.TN/MS(C)/PP-23



